"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி 1998



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00


Indian Musical Instruments
7 Days a week, 11.00am To 7.00pm
JAS Musicals Ltd
108A The Broadway, Southall Middx. UB1 1QF U.K. Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445
தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நேரில் வாருங்கள்.
அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்.

# உள்ளே.....


ஆசிரிய தலையங்கம்
சிந்திப்போம்! செயற்படுவோம்!
அமைதி காண்போம்!

வெகுதானிய
வருடமே வருக -2

உள்ளே...............

ரூட்டிங்
அம்மன்கோவில்
சிறப்புப்பக்கம் 4-5

ஞானக் கவிதை........ 6-7

இந்துமதம் 8-9

**CHILDREN'S SECTION**
Muruga Nayanar.....17
Tamil New year...17
The Cat and Parrots..18
சிறுவர் வரைந்த சித்திரங்கள்.....19
Sri Ramakrishnar...20
The sport of Lord Siva..22
ஆத்தி சூடி.....24

கலசம் சஞ்சிகையூடு....10

சிவஞானத்திற்குப்
பிரமாணம்
13-14

இந்துக்களே...29-31
வித்துவான் க.ந.வேலன்

மெய்ஞ்ஞான
ஒளியைத்தேடி.............25
சுவாமி யோகேஸ்வரானந்தா

கட்டுரைப்போட்டி............16
சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும்
தங்கப் பதக்கம் பரிசு

ஆன்மீகக் கவிஞர்
32-33

வெகுதானிய வருடப்
பலன்கள்- 34-35
ஓதுவார்.......36

இரக்கத்துக்குரிய
இந்துமதம்......37-38

இருபதே பன்னிரண்டு 27 -28


கலசம்
வாசகர்களுக்கும் விளம்பரதாரர்
களுக்கும் எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

## Advertisements


Jazz Musicals- Inside cover
Dimple Motors.....12
Markandan & Co.....12
Kumarans......15
Prasad's Sweet...09
Dental Surgery.........26
Vasan &Company.....26
GlenCarriers Ltd...39
Sathy Estates.....39
KN Enterprises....40
Welcome Centre....11
Raja & Co..... 28
East London Computers...Back cover
Western Jewellers.....Inside Back Cover



ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் — துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன் — துணை நிர்வாகம்: திரு சிவ. அசோகன்

நிர்வாகக்குழு
திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு சி. அற்புதானந்தன், Dr.ந. நவநீதராசா, திரு இ. சிவானந்தராஜா, திரு சி. தர்மலிங்கம்

வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா), 42, Stoneleigh Road, Clayhall, Ilford Essex, IG5 0JD, England Tel/Fax:0181 550 4233

இலங்கையில் தொடர்பு: Mr. V. Balasubramaniam, 131 Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka
ஜேர்மனியில் தொடர்பு: Mr. T. Lambotharan, Kolner Str 298, 51645 Gummerbach, Germany

# தரும் வரங்கள் தரணிக்குத் தந்திட வெகுதானிய வருடமே வருக!

வாஞ்சையுடன் பகலவன் மேஷத்தில் மருவிவர
தேனமுத செந்தமிழர் திக்கெட்டும் சென்று மகிழ
தென்றலொடு சித்திரை மாதமிது மலர்ந்து மகிழ
கானமிடும் எம்மக்கள் கருத்தைச் சுவைத்துக் கதிரவனும் மகிழ
கவினுடனே பொன்கதிர் பூவுலகில் பொலிந்து மகிழ
தானவரும்தாமே தரும் வரங்கள் தரணிக்குத் தந்து மகிழ
தடையின்றி வெகுதானிய வருடமே வருக வருக

அறம் காக்க ஆண்டவனால் மனிதப் பிறப்பானோம்
ஆறாம் அறிவைக் கொண்டு அதைப் போற்றிப்பேணுவோம்
திறம் நோக்கி செயல் ஆற்ற திரளுவோம் ஒன்றாய்
தேசம் எங்கும் தேன் மதுர தமிழ் சமயம் காப்போம்
புறம்காட்டி எம் சமய மொழியைப் புதைக்காமல்
புதியவர்க்கு என்றும் அவற்றைப் புகட்டி நிற்போம்
அறம் பெருகு காரியங்கள் அனைத்தும் திறம்பெருக
ஆசிதர வெகுதானிய வருடமே வருக வருக

ஈழத்தில் எம்மனதை இழுத்துச் செல்வோம்
இயங்கியல் யதார்த்தம் பெற இறையை இறைஞ்சுவோம்
கோலத்தில் எம்மை நாம் மாற்றிக் கொண்டாலும்
கொண்ட தமிழ்சமயப் பற்றை மாற்றாது பேணுவோம்
ஆழத்தில் எம்கலாச்சாரம் வே ரூன்ற அனைவரும்கூடி
அன்பான புதுவேகம் புத்தாண்டில் கொள்வோம்
காலத்தில் என்றும் முன்நின்று நாம் செயல்ஆற்ற
காவியமாய் வெகுதானிய வருடமே வருக வருக.

– துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்–

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

மணி 5 ஒலி 22

# கலசம்
# KALASAM

சித்திரை–வைகாசி–ஆனி 1998

## சிந்திப்போம்! செயற்படுவோம்! அமைதிகாண்போம்!

இன்று இலண்டன் நகரத்தில் பல ஆலயங்கள் பல சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மனிதனின் அமைதியான வாழ்க்கையை மனதில் கொண்டே இவைகள் உருவாக்கப்பட்டாதாகக் கூறப்பட்டபோதிலும் பிரச்சினைகள் நிறைந்தவைகளாக இவை இயங்கி வருவதை கலசம் அமைதியாக அவதானித்துக் கொண்டிருக்கிறது. பல கடிதங்கள் பல தொலைபேசி அழைப்புகள் ஆதாரங்களோடு எமக்கு வருகின்றன. அவரவர் உள் பிரச்சினைகளில் தலையிடுவது கலசத்தின் நோக்கமல்ல. கலசம் அதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதுமல்ல. ஆனால் எந்த ஒரு பிரச்சினையாவது ஒட்டுமொத்தமான சமய சமூக வாழ்வினைப் பாதிப்பதாக இருந்தால் அமைதியோடு எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது எங்கள் பத்திரிகா தர்மத்துக்கடங்கிய கடமையாகும். அமைதியைத் தேடி ஒருமனிதன் செல்கின்ற இடம்தான் ஆலயம். பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்காக ஆலயத்துக்கு செல்லக் கூடாது.

இன்று ஆலயங்களில் தர்மகர்த்தாக்களுக்கும் குருக்கள்மாருக்கும் நல்ல புரிந்துணர்வு இல்லை. குருக்கள்மாருக்கும் பக்தர்களுக்குமிடையிலும் புரிந்துணர்வு இருப்பதில்லை. பிராமணர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை கல்லெறியும் சொல்லெறியும் வாங்கி அலுத்துப் போய்விட்டார்கள். ஆலய தர்மகர்த்தாக்களோ ஆலய நிர்வாகத்தின் செயற்றிறமையின்மையால் அமைதியற்ற நிலையில் இருக்கிறார்கள். பொருளாதாரத் தேவைகளும் பொருளாதாரச் சமநிலையின்மையும் இருபக்கத்திலும் முரண்பாடுகளை உருவாக்கி ஆலயத்தில் அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருபக்கத்தாரும் பக்தர்களின் நன்மை கருதி கூடிக்கதைத்து அமைதியான முடிவுக்கு வருதலே சாலச் சிறந்தது.

பக்தர்கள் சிலர் ஆலயங்களில் குருக்கள்மார் தெரிந்தவர் தெரியாதவர் என்று பேதம் பாராட்டுவதாகக் கூறுகின்றார்கள். உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்களும் மனிதர்கள்தான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். மூதாதையர்களால் கடவுளுக்குப் பூசை செய்வதற்காக அவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவ்வளவுதான். அதற்கு மிஞ்சி அவர்களும் சாதாரண மனிதர்களே! சாதாண மனிதனுக்குள்ள சகலவிதமான பலவீனங்களும் அவர்களுக்கும் உண்டு.

சில கல்யாணங்கள் தரகர் மூலமாகத்தான் நடைபெறுகின்றன.

சில கல்யாணங்கள் தரகர் துணை இல்லாமலே நடக்கின்றன.

இவை அவரவர் மனநிலைகளையும் தேவைகளின் எல்லைகளையும் பொறுத்தவை.

ஆதலால் கடவுளை வணங்குவதற்கு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் தரகராக குருக்கள் தேவை என்று கருதுபவர்கள் தரகருக்கு உரிய மரியாதைகளைக் கொடுக்கவேண்டும். இதுதான் மனிதாபிமானம்.

மற்றும்படி சம்பளப் பிரச்சினைகள் முதலாளி தொழிலாளிப் பிரச்சினையே. இதை அவர்களே தீர்த்துக்கொள் ளவேண்டும். மனிதன் உள்ளத்தில் அமைதியை தோற்றுவிப்பது உங்களின் தலையாய கடமை.

சிந்திப்போம்! செயற்படுவோம்! அமைதிகாண்போம்!

ஓம் நமசிவாய!

ஆசிரியர்

## வாசகர்களின் கவனத்திற்கு!!

கலசத்தின் இரண்டு பக்கங்கள் ஆலயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விரு பக்கங்களுக்கான அச்சுச் செலவினையும் ஆலயங்களே பொறுப்பேற்கின்றன. முன்மாதிரியாக இப்பணியை ரூட்டிங் முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் ஆரம்பித்து வைத்துள்ளனர். இதில் அடங்கும் விடயங்கள் ஆலயப் பொறுப்பாளர்களினால் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய ஆலயங்களையும் இம் முயற்சியில் கலந்து கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

–ஆசிரியர்–

# அருள்மாரியை அள்ளிப் பொழியும் அன்னை முத்துமாரி அம்மன்

இப்பூவுலகில் பஞ்சபூதங்கள், அண்ட சராச்சரங்கள், ஏனைய கிரகங்கள் ஆகிய அனைத்துமாய் இருப்பது சிவம் எனவும், அவற்றின் முறையான அனைத்து இயக்கங்களுக்கும் காரணமாய் இருப்பதை சக்தி எனவும் பல்வேறு நிலைகளில் நம் முன்னோர்கள் கண்டறிந்து நமக்கு எடுத்துரைத்துள்ளனர்.

நம்முடைய பிறப்பு முதலில் தாய் தந்தையரிடம் தொடங்கி னாலும் தாயாலேதான் நம்மை முழுமைப்படுத்தி நமக்கு உருவம் கொடுத்து எல்லாவற்றிற்கும் மேலாக உயிர் கொடுத்து இவ்வுலகிற்குத் தரமுடிகின்றது. அதனா லேதான், பெரியோர்கள், தாய் தந்தையின் நிலைபற்றிக் கூறும் போது, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும், தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை எனவும் தாய்மையை முதன்மைப் படுத்திக் கூறி உள்ளனர். நம்மைப் பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தெடுக்கும் ஒருவரை அம்மா என்றும் தாய் என்றும் அழைப்பது போல, இவ்வுலகைப் படைத்து, அதில் அனைத்துச் சீவராசிகளையும் தனது பேராற்றலால் உருவாக்கி, அவற்றின் இயக்கங்கள், அவற்றின் வாழ்வில் இன்ப துன்பங்கள் ஆகிய அனைத்திற்கும் காரணமாய் இருக்கின்ற உயரிய சக்தியை உலகத் தாய், உலக மாதா என அழைப்பதில் தவறென்ன இருக் கின்றது? அவளே தலையாய தெய்வம் என்பதில் ஐயம் என்ன இருக்கின்றது? அத்தகைய சக்தியானவளை உலகின் பல்வேறு இடங்களில், அவ்விடங்களில் அன்னையால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களுக்கேற்ப உருவாக்கப்பட்ட திருநாமங்களில் வணங்கி வழிபட்டு வந்துள்ளனர் நம் முன்னோர்கள். அந்த வகையில் உலகின் வெப்பநிலை சமன்படவும், வெப்பம் அதிகரிக்கும்போது அதனால் ஏற்படும் கொடிய நோய்களிலிருந்து உயிரினங்கள் காப்பாற்றப்படவும், உலக மக்களின் உடலும் உள்ளமும் எப்போதும் குளிர்ச்சியுடன் திகழவும், அவர்தம் வாழ்வில் சுபிட்சம் நிலவிடவும் பராசக்தி அன்னையார் எடுத்ததே மாரியம்மன் என்னும் திருக்கோலம். மாரி என்றாலே மழை, குளிர்ச்சி என்றுதானே பொருள்! அப்படிக் குளிர்ச்சியான அவளது எழில் உருவத்தைக் கண்டு, கசிந்துருகித் தரிசிப்பவர்கள் வாழ்வில் எல்லாச் செல்வங்களும் நிலை கொள்வர் என்பதில் என்ன சந்தேகம்?

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** என்னும் பழமொழிக்கேற்ப, உலக மக்கள் அனைவரும் நோயில்லா வாழ்வினைப் பெறும்பொருட்டு முன்னோர்களால் தொடக்கி வைக்கப்பட்டதே மாரியம்மன் என்னும் சக்தி வழிபாடு. பண்டைய காலம் தொட்டு நமது நாட்டின் ஒவ்வொரு கிராமங்களிலேயும் கிராம தேவதையாக மாரியம்மனை நிறுவி அம்மை முதலான வெப்பநோய்கள் மக்களை வருத்தாவண்ணம் பால், இளநீர் முதலானவைகளை அன்னைக்கு அர்ப்பணித்து, பொங்கல் படைத்து அனைவரும் ஒன்றுகூடித் திருவிழா எடுத்து மகிழ்ந்துள்ளனர்.

இத்தகைய தொன்மைவாய்ந்த மாரியம்மன் வழிபாட்டின் பயனை இலண்டன் வாழ் தமிழ் மக்களும் அடைய வேண்டும். அதனால் மக்கள் நோயற்ற நிறைவான வாழ்வினைப் பெற்றிடவேண்டும் தென்னாட்டின் சைவநெறி தமிழர் வாழும் எப்பகுதியிலும் சிறக்க வேண்டும் என்கின்ற பேரவாவினிலே தோற்றுவிக்கப்பட்டதே அருள்மிகு இலண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதன் அடிப்படையில் சிவயோகம் என்னும் சமூக அறக்கட்டளை ஆரம்பிக்கப்பெற்று அதன் பராமரிப்பில் முதலில்

அன்னையின் ஆலயம் உருவாகி, எதிர்வரும் ஏப்ரல் மாதத்தோடு முடிவடையும் ஈராண்டுக் காலத்தில் அன்னைபொழிந்திட்ட அருள்மழைக்கு அளவேயில்லை. அன்னையே தஞ்சமென நம்பிவரும் அடியார்க்கு அருள்மாரி தரும் அன்னை முத்துமாரி தன்னுடைய பரிவாரங்களாக ஸ்ரீசக்தி விநாயகர், ஸ்ரீசீதை, இலட்சுமணர், ஆஞ்சநேயர் சகிதமாக எழுந்தருளி உள்ள ஸ்ரீராமபிரான், அன்னை அபிராமி அம்பிகையுடன் அமைந்துள்ள அருள்மிகு அமிர்தலிங்கேச சிவபெருமான், குருவாயூரப்ப சுவாமி, அருள்மிகு சிவகாமி அம்மனுடன் உறைகின்ற அருள்மிகு நடேசப் பெருமான், அருள்மிகு விஜயதுர்க்காதேவி, அருள்மிகு விஜயலட்சுமிதேவி, அருள்மிகு விஜயசரசுவதிதேவி, நவக்கிரகங்கள் ஞானவைரவர், முதலானோரையும் அழகுற அமைத்துக் கொண்டு அருளும் காட்சியின் மாட்சிமையைக் காணக் கண் கோடி வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அம்பிகைக்கு மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் ஆனந்தமயமான அபிடேகம், 7.30 மணிக்கு மகாதீபாராதனை, தொடர்ந்து பக்தப்பெருமக்கள் ஒருமித்த குரலில் இசைக்கும் துக்க நிவாரண அஷ்டகத் தோத்திரப் பாடல்கள் அனைத்தும் பங்குகொள்கின்ற அனைவரின் மனதையும் ஏகாந்தப்படுத்துவது கண்கூடு.

இது தவிர ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி தினத்தன்று ஸ்ரீவிநாயகர் ஆலய வலம் வருதலும் கார்த்திகை, பிரதோஷம், பௌர்ணமி, ஏகாதசி, முதலான தினங்களில் அதற்குரிய தெய்வங்களுக்கு விசேட பூசை ஆகியவையும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு வருட விசேட தினங்களான தமிழ் வருடப் பிறப்பு, ஆங்கில வருடப் பிறப்பு, மகா விநாயக சதுர்த்தி, நவராத்திரித் திருவிழா, கந்த சஷ்டி உற்சவம் சூரசங்காரம், திருக்கல்யாணம், ஆருத்ரா தரிசனம், தைப் பொங்கல் திருவிழா, மகாசிவராத்திரி, தைப்பூசம், பங்குனி உத்திரம், கிருஷ்ண ஜெயந்தி முதலியவையும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு விசேட அபிஷேகமும் தொடர்ந்து அம்மனின் சன்னதி முன்பாக பொங்கல் வைத்தலும் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வருடம் நடைபெற்ற பிள்ளையார் நோன்புத் திருவிழா, சூரசங்கார உற்சவம், முருகப் பெருமானின் திருக்கல்யாண உற்சவம், தைப்பூசப் பாற்காவடித் திருவிழா, மகாசிவராத்திரி சமய கலாச்சார விழா ஆகியவை இலண்டன்வாழ் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஆன்மீக உணர்ச்சியை, புதிய உத்வேகத்தை உருவாக்கி உள்ளன என்பது நிச்சயம்.

அம்பிகைக்கு மிகவும் உகந்த திருநாளாகிய சித்திராபௌர்ணமி இவ்வாலயத்தில் வருடத் திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இரண்டாவது ஆண்டாக இவ்வாண்டு நடைபெறும் சித்திரா பௌர்ணமிப் பெருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி பிள்ளையார் திருவிழாவுடன் தொடங்கப்பெற்று, 21 நாட்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாட அம்மன் திருவுளம் கூட்டியுள்ளாள்.

## நிகழ்ச்சிநிரல்

**26. 04. 98 ஞாயிற்றுக்கிழமை**

பிள்ளையார்த் திருவிழா காலை 9.30 மணி அனுக்ஞை, விக்னேஸ்வரபூசை 10.00 மணி கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம் 12.00 மணிக்கு விசேட பூசை

மாலை 6 மணிக்கு விநாயகர் அபிடேகம் 8 மணி பூசை யைத் தொடந்து விநாயகர் ஆலய வலம்

**27. 04. 98 திங்கட்கிழமை**

மாலை 9.00 மணி, கொடியேற்றம்

**28. 4. 98 இல் இருந்து**

தினசரி காலை 10.00 மணிக்கு கலச பூசை,10.30 மணிக்கு அபிஷேகம், பகல் 12.00 மணிக்குப் பகற் பூசை, மாலை 5.00 மணிக்கு யாகசாலை பூசை, மாலை 6.00 மணிக்கு அபிஷேகம், இரவு 8.00 மணிக்கு விசேட பூசை, இரவு 8.30 மணிக்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வலம்

**10. 05. 98 ஞாயிற்றுக்கிழமை**

இரவு 9 மணிக்கு தேர்த்திருவிழா

**11. 05. 98 திங்கட்கிழமை**

சித்திரா பௌர்ணமி காலை 10.45 மணிக்கு மேல் 11 மணிக்குள் தீர்த்தம், மாலை அம்பாள் புஷ்ப விமானத்தில் ஆலய வலம்.

**12. 05. 98 செவ்வாய்க்கிழமை** முருகன் திருவிழா

**13. 05. 98 புதன்கிழமை** சாகம்பரி (காய்கறி) அலங்காரத் திருவிழா

**14. 05. 98 வியாழக்கிழமை** ஊஞ்சல் திருவிழா

**15. 04. 98 வெள்ளிக்கிழமை** பூங்காவனம்

**16. 05. 98 சனிக்கிழமை** வயிரவர் மடை.

## சிறப்பு நிகழ்ச்சி

***26.04.98 தொடக்கம் 16.05.98 வரை தினசரி மாலை 7 மணி முதல் 8 மணி வரை செந்தமிழ்த் தென்றல் உயர்திரு. சுகி. சிவம் அவர்களின் சமய, ஆன்மீகச் சொற்பொழிவு இடம் பெறும்.***

பிள்ளைகளுக்கான சமய அறிவுத் தேர்வுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. விபரங்களுக்குஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

# ஞானக்கவிதைகளும் மோனச் சிலைகளும்

— தமிழரசி —

## நாதப்பறையினர்

***வேதமொழியர் வெண்ணிற்றர் செம்மேனியர்***
***நாதப்பறையினர் அன்னே என்னும்***

என மணிவாசகர் அன்னைப்பத்தில் சிவனின் தோற்றத்தை வருணிக் கின்றார். சிவன் பறையை(மேளம்) வாசித்துக் கொண்டு எங்காவது இருக்கின்றாரா? சிவன் நாதப் பிரமம் ஆதலால் நாதப் பறையினர் எனக் கொள்வாரும், நடராஜரின் **கையில் உள்ள உடுக்கையே நாதப்பறை** எனக் கொள்வாரும் உளர். இக் கருத்துக்கள் எனக்கு சரியென்று படவில்லை. இத் திருவாசகத்தின் தொடக்கத்தில் வேதமொழியர் என மாணிக்க வாசகர் சுட்டுவதால் நால்வருக்கு அறம் உரைத்த தட்சிணாமூர்த்தி வடிவத்தில் பறையை கையில் வைத்திருக்கும் சிவனைத் தேடி னேன்.

ஆகமங்கள் தட்சிணாமூர்த்தி வடிவங்களை நான்காக வகுக் கின்றன.

(அ) வியாக்கியான தட்சிணாமூர்த்தி
(ஆ) யோக தட்சிணாமூர்த்தி
(இ) ஞான தட்சிணாமூர்த்தி
(ஈ) வீணாதர தட்சிணாமூர்த்தி



## வியாக்கியான தட்சிணா மூர்த்தி

வீராசனத்தில் அமர்ந்த தட்சிணா மூர்த்தி முன்வலக்கை சின் முத்திரை[2] பிடித்தபடி காணப்படும்.

***அன்றாலின் கீழ் இருந்து அறம் சொன்னானை***

என்னும் அப்பர் திரு வாக்குக்கு அமைய வுள்ள வியாக்கியான தட்சிணா மூர்த்தியை கீழையூர் சோளீஸ ்வரர் கோயிலில் காணலாம்.



## யோக தட்சிணா மூர்த்தி

இந்த வடிவம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பத்மாசனத்தில்[3] அமர்ந்து காணப்படும்
2. உத்குடி[4] இருக்கையில் அமர்ந்திருக்க இடக்காலையும், உடலையும் சுற்றி யோகபட்டை காணப்படும்.
3. இரு கால்களும் குத்திட்டு இருக்கையில் இருக்க இரு கால்களையும் சுற்றி யோக பட்டை காணப்படும்.

***அன்றாலின் கீழ் அறம் நால்வருக்கருள் புரிந்து*** என்று சம்பந்தர் பாடும் யோக தட்சிணா மூர்த்தியை திருக் காட்டுப்பள்ளி அக்கினீஸ்வரர் கோயிலில் பார்க்கலாம்.



## ஞான தட்சிணாமூர்த்தி

இப்படிமத்தில் வலக்காலை முயல கன் மேல் ஊன்றி வலது தொடை மீது இடக்காலை மடித்து வைத்து வீராசனத்தில் அமர்ந்து வலக்கை சின்முத்திரை பிடித்திருக்க மற்றக் கைகளில் புத்தகம் நெருப்பு, பாம்பு என்பன காணப்படும்.

***கல்லால் நிழல் மேல் நின்ற கறைசேர் கண்டர்***

எனும் சம்பந்தர் தோத்திரத்திற்கு இசைய மேலைக் கடம்பூரில் கிளை பரந்த ஆலமர நிழலின் கீழ் ஞான தட்சிணாமூர்த்தி வீற்றி ருக்கின்றார்.



## வீணாதர தட்சிணா மூர்த்தி

இவ்வுருவில் தட்சிணா மூர்த்தியின் முன்னிருகைகளில் வீணை காணப்படும். இவ்வடிவம்

1. நின்ற நிலையில் – லால்குடி, சப்தரிஸ்வரர் கோயிலிலும்
2. இருந்த நிலையில் – நார்த்தாமலை, விஜயாலய சோளீஸ்வரர் கோயிலிலும் காணப்படுகின்றது. வீணாதர தட்சிணாமூர்த்தியை

***வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி***

என சம்பந்தரும்

***தங்கையில் வீணை வைத்தார் தம்மடி பரவ வைத்தார்***

என அப்பரும் பாடிப் பரவசப்படு கிறார்கள். மேலே கூறப்பட்ட நான்கு வகை யான தட்சணா மூர்த்தி வடிவங்களில் வராத நாதப் பறையினரை எங்கே தேடுவது. மணிவாசகர் பாடிய இந்த நாதப்பறையினரை நான் சென்ற கோயில்களில் எல்லாம் தேடி வெட்டுவான் கோயிலில் மிருதங்க தட்சிணா மூர்த்தி யாகக் கண்டு மகிழ்ந்தேன்.



இந்த வெட்டுவான் கோயில் திரு நெல்வேலி மாவட்டத்தில் கழுகு மலையில் உள்ளது. இது ஒரு குடைவரை கோயில். இக் கோயிலை தென்னக எல்லோரா என்றும் கூறுவார்கள். இக் கோயிலில் சிற்பங்கள் மிகமிக நேர்த்தியாக உள்ளதாலும் எல்லோரா போல் மலையைக் குடைந்து கோயில் கட்டப்பட்டுள்ளதாலும் இதனை தென்னக எல்லோரா என்கின்றனர்.

மணிவாசகரின் ஞானக் கவிதைக்கு ஏற்ற மோனச் சிலையை தென்னக எல்லோராவின் தெற்குப் பக்க சுவரின் விமான[5] நடுப்பகுதியில் காணலாம்.

இங்கே தட்சிணாமூர்த்தி சுகாச னத்தில் அமர்ந்து இருக்கிறார். அவரின் நான்கு கைகளில் முன்னிரு கைகளுக்கிடையே மிருதங்கம் காணப்படுகின்றது. இக்கைகள் சிதைந்துள்ளன. இடக் காலுக்குக் கீழே முயலகன் உள் ளான். ஓர் ஆசானுக்குரிய சகல லட்சணங்களுடனும் தட்சிணா மூர்த்தியைச் செதுக்கிய சிற்பி, உடையின் மடிப்புகளைக் கூட மிகவும் அழகாக வடித்து வைத்திருக்கின்றான். நளினம் மிக்கதோர் அற்புதக் கலைப் படைப்பு இந்த மிருதங்க தட்சிணாமூர்த்தி.

மணிவாசகருடன் சேர்ந்து நாமும்

*வேதமொழியினர் வெண்ணீற்றர் செம்மேனியர்*
*நாதப்பறையினரன்னே யென்னும்*
*நாதப்பறையினர் நான்முகன் மாலுக்கு*
*நாதரிந் நாதனார் அன்னே என்னும்*

*என்று நாதப்பறையினரை வழுத்துவோம்*

## பின்குறிப்பு

கழுகுமலை கோவில்பட்டிக்கும் சங்கரன் கோவிலுக்கும் இடையே உள்ளது. குன்றுதோறாடும் முருகனே இங்கும் மூலவராக இருந்து அருளுகின்றாள்.

1. வீராசனம் – ஒரு கால் தொங்கவிட்டு கீழே ஊன்றி இருக்க மற்றொரு காலை அதன்மீது விறைப்பாக மடித்து வைத்து நேராக இருத்தல்.
2. சின்முத்திரை – பெருவிரலினதும் ஆட்காட்டி விரலினதும் நுனிகள் ஒன்று சேர்ந்திருக்க உள்ளங்கை எதிரே இருப்பவரை நோக்கி இருத்தல்.
3. பத்மாசனம் – இரு கால்களும் மடித்து ஒன்றின் உள்ளங்கால் மற்றொன்றின் தொடைமீது இருக்க இருத்தல்.
4. உத்குடி – ஒருகால் இருக்கையில் குத்திட்டு இருக்க மற்றக்கால் தொங்கிய நிலையில் முதுகு சற்று வளைந்து இருக்க இருத்தல்.
5. விமானம் – கருவறையின் மேல் பகுதி
6. சுகாசனம் – ஒருகால் இருக்கையில் படுக்கையாக இருக்க மற்றக்கால் தொங்கிய நிலையில் இருக்க இருத்தல்.



# இந்து மதம்

ரமணரைப்போல் தாமும் உலகைத் துறக்கப் பலர் முயற்சித்ததுண்டு. மனம் போதிய பக்குவ நிலையை அடையமுன் உலகத்தையும் அதன் மீதுள்ள பற்றுதலையும் துறந்துவிடுதல் சாத்தியமானதல்ல. வீட்டைவிட்டு வெளியேறி தவவாழ்க்கை மேற்கொள்ள விரும்பிய ஒருவர் ரமணரிடம் அனுமதிபெற ஆசி ரமம் வந்தார். தனது மன ஓட்டங்களை சுவாமிகளிடம் தெரிவித்தார்.

நம்முடைய உடல் சமுதா யத்துக்கு முதலில் நன்கு பயன்படவேண்டும். இந்த உடலை நம்பியிருக்கும் குடும்பத்தினரை முதலில் காப்பாற்ற வேண்டும். தன்னைத்தானே உணர்ந்து கொண்டபிறகே உலக வாழ்க்கையைத் துறத்தல் வேண்டும். அதற்கு முன்னாலேயே அதைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது. என்று ரமணர் கூறினார்.

மனதைக் கட்டுப்படுத்தி அமை தியோடு இருக்கவொட்டாமல் தன்னை இல்லற வாழ்க்கை தடுப்பதாக நடேச முதலியார் என்பவர் கேட்டார். சுவாமிகள் நீ அந்த ஒரு இடையூறுக்காக இல்லறத்தை வெறுத்துத் துறவறம் மேற்கொள்ள நினைக்காதே. துறவறத்தில் இது போல பன்மடங்கு இடையூறுகள் வரும். நான் ஏன் துறவறம் மேற் கொண்டேன் என்று கேட்காதே. நான் எப்படியோ துறவு வாழ்க்கைக்கு வந்துவிட்டேன். இல்லறத்தில் ஈடுபடு முன்னே துறவறத்துக்கு வந்துவிட்டேன். ஆனால் நீயோ அப்படியன்று வீட்டி லிருந்து கொண்டேபற்று நீங்கி வாழப் பழகு என்று கூறினார்.

***பால் ப்ரண்டன்*** என்ற ஆங்கிலேயர் ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்டு ஆராய்ச்சி செய்து வந்தார். அவர் ரமண மகரிசியைத் தரிசித்த பின் அவரிடம் தொடர்ச்சியாக பல வினாக்களை எழுப்பி விளக்கங்கள் கேட்டார். அவற்றிற்கு ரமணரும் தெளிவாக மேல் வரும் பதில்களைக் கூறினார். நான் யார் என்று அறிய நீங்கள் ஒன்றே ஒன்று மட்டும் செய்தால் போதும் உங்களுக் குள்ளேயே உங்களைத் தேடுங்கள் அதை முறையாகச் செய்யுங்கள் உங்கள் ஐயங்கள் அனைத்துக்கும் விடை கிடைக்கும். தொடர்ந்த தியானத்தின் மூலம் அது சாத்தியம். ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்ற த்தைக் கண்ணால் காண முடியாது. ஆனால் முன்னேற்றம் ஏற்பட் டிருக்கும். குருவின் உதவி தேவை தான். குருவால் வழி காட்ட மட்டுமே முடியும். ஆனால் தன்னைத் தானே தான் முயன்று உணர்தல் கூடும். எவ்வளவு நாட்களில் அறிவுத் தெளிவு பெற முடியும். என்பது அவரவர் மனப்பக்குவத்தையும் அதனை விரும்புவோரின் மனத்தையும் பொறுத்தது. வெடிமருந்து உடனே தீப்பற்றிக் கொள்கின்றது. கரி தீப்பற்றுவதற்கு அதிக நேரம் பிடிக்கிறதல்லவா? அது போன்று தான் இதுவும்.

உண்மையை உணர வாழ்க் கையில் கர்மத்தை விலக்க வேண்டுமா என்பதற்கு வாழ்க் கையில் கர்மத்தை விலக்க வேண்டியதில்லை. அன்றாடம் ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ தியானம் செய்துவிட்டு உங்கள் அன்றாடப் பணிகளைத் தொடரலாம். சரியான வழியில் தியானம் பயின்றால் மனம் அலுவல்களுக்கிடையிலே விழிப் போடு இருக்கும். மனதில் ஒரு சக்தி ஓடிக்கொண்டிருக்கும். இப்படிச் செய்வதால் உங்களுக்கு உலகப் பொருள்கள் மீதும் மக்கள் மீதும் உள்ள எண்ணங்கள் படிப்படியாக மாறும். உங்கள் தியானப் பயிற்சியைத் தொடர்ந்தே உங்கள் செய்கை அமையும்.

முதலில் சுயநலத்தை விட்டொழிக்க வேண்டும். சுயநலமே மனிதனைப் பந்தப்படுத்துவது தன்னைப் பற்றிய தவறான கற்பனையை விட்டொ ழிப்பதே உண்மையான துறவு நிலையாகும். அலுவலுக்கும் அறிவுக்கும எந்தத் தொடர்பும் கிடையாது. அறிவு பூர்வமாக சிந்தித்து உண்மையான நான் என்பது என்னவென்று உணர்ந்து செயற்பட்டால் சுய நலத்தை ஒழிக்க முடியும். ஆன்மீகத்தில் மேல் நிலை அடையும் போது மனம் உடலோடு ஒட்டுவதில்லை. உடல் புரியும் கர்மங்களை அப்போது நாம் புரிவதாக நினைக்க மாட்டோம். பரம் பொருள் தான் நம் மூலம் செய்வதாக நாம் உணர்வோம் என்றார் ரணமர்.

புறக் கர்மத்தில் ஈடுபட்டிருக்கும் போது தியானம் செய்ய எப்படி நேரம் கிடைக்கும் என்பதற்கு ஆன்மீக

வாழ்வில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்குத் தான் இந்தப் பிரச்சனை. அவர்கள் தான் தியானத் துக்கென்று தனியாக நேரம் ஒதுக்கவேண்டும். சில படிகள் முன்னேறியவர்கள் தியானத்துக் கென்று தனியே நேரம் ஒதுக்க வேண்டியதில்லை. உடல் கரு மத்தில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களுடைய மனம் தானாகவே தியானத்தில் நிலைத் திருக்கும் என்று ரணமர் கூறினார்.

மனிதர்களுடைய சுபாவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது எல்லா மனிதர்களும் துன்பமே அனுபவிக்காமல் மகிழ்ச் சியையே அனுபவிக்க விரும்புகின்றனர். அவர்கள் அடைய விரும்பும் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. மனிதனுடைய உண்மையான சொரூபமே உண்மையில் மகிழ்ச்சி எனப் படுவதாகும். மனிதனுக்குள்ளேயே மகிழ்ச்சியும் மறைந்து கிடக்கின்றது. ஆனால் அவன் தன் அறியாமையினால் அதனை அவன் வெளியில் தேடி அலைகின்றான்.

உண்மை சொரூபம் அழியாதது. அதுவே நித்தியானந்தத்தைத் தரக் கூடியது. உண்மை சொரூபத்தை அறிந்து கொள்ள வேண்டுமாயின் மனிதன் தன்னைத் தானே ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் என்பது பரம் பொருளிடமிருந்து வருகின்றது உடலே நான் என்ற தவறான எண்ணம். அதுவே நான் என்று உணரும் போது மறைந்து போக வேண்டும். ஒவ்வொரு மனிதன் மனதிலும் நான் என்ற எண்ணம் தான் முதன் மதலில் உருவாகின்றது. இந்த எண்ணம் தான் முதன் முதலில் உருவாகின்றது. இந்த எண்ணம் உதயமான பிறகே நீ என்ற இரண்டாவது எண்ணம் உருவாகின்றது. மனதளவில் பின்னோக்கி அந்த முதல் எண்ணத்தை நோக்கிச் சென்றால் அதனை உணர்ந்து கொள்ள முடியும். இடையில் உள்ள எண்ணங்கள் அனைத்தையும் ஒழித்தால் தான் முதல் எண்ண த்தை அடைய முடியும் உடலே நான் என்ற எண்ணம் ஒழியும் வரை இந்த விசாரணையை தொடர வேண்டும். பிறகு அழியாத சொரூ பத்தை, உணர்வை, நிலையான உண்மையை உணர்வான். உண்மையான அறிவாளியாகத் திகழ்வான். நான் என்ற எண் ணம் உடல், மனம், புத்தி ஆகியவற்றோடு இல்லாமல் இவற் றிற்கு அப்பால் உள்ள ஒன்று தான் நான் என்று உணர்வான். மனத்துக்கு அப்பால் உள்ள அது எல்லை யற்றது நித்தியமானது அதுவே சொர்க்கம். அதனைச் சிலர் ஆத்மா என்று கூறுகின்றனர். சிலர் நிர்வாண சொரூபம் என்கின்றனர். நிர்வாணம் என்பது யாவற்றையும் கடந்த அதீதநிலை . இந்துக்கள் அதனையே முக்தி நிலை என்கின்றனர். எப்படி வேண்டுமானாலும் அதனை அழைக்கலாம் என்று விளக்குகிறார் ரமணர்.

(இன்னும் வரும்...)


**PRASAD SWEETS**

புதிதாகத் தயாரிக்கப்பட்ட லட்டு, மைசூர் பாகு, முறுக்கு, ஜிலேபி, மற்றும் சகலவழதமான சைவ இனிப்புவகைகள் எம்மிடம் கிடைக்கும்

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை நீங்கள் அணுகலாம்

**Always Fresh & Best**

**222 Ealing Road Wembly, Middlesex**
**Tel: 0181 902 1704**

**168 Upper Tooting Road , London SW17**
**Tel: 0181 682 3363**

# கலசம் சஞ்சிகையூடு கருத்துப் பரிமாறல்

கலசம் ஆசிரியர் அவர்கட்கு!

பெண்கள் பஞ்ச புராணம் பாட லாமா?

எமது சைவசமயக் கோட்பாடுக ளின்படி காலை மாலை தியானம் செய்து தேவார திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புராணம் ஓதி ஈற்றில் திருப்புகழ் ஓதி நிறைவு செய்வதே முறை.

1. பெண்கள் சிவ தீட்சை பெறுகிறார்கள். மந்திரங்கள் ஓது கிறார்கள்.

2. எந்தச் சமயப் பண்டிகைகளிலும் பெண்களே முன்னின்று நடத்து கிறார்கள்.

3. ஆலயங்களில் அபிஷேக ஓம குண்டலத்தில் வேள்வித் தீக்குரிய பொருள்களைக் கணவனும் மனை வியும் சேர்ந்தே இடுகிறார்கள்.

4. திருமணங்கள் நடக்கும்போது கன்னிகாதானம் செய்யும் பொழுது நீர் விடுவது பெண்கள்.

5. பண்டைக்காலத்தில் பெண்கள் மந்திரம் ஓத, ஆண்கள் பூசை செய்தார்கள் என்பது இலக்கி யங்களில் காணப்படுகின்றது.

6. தற்காலத்தில் பெண்களும் குருப்பட்டம் பெற்று பூசைகள் நடத்தலாம் என்ற நிலைப்பாடு தோன்றி உள்ளது.

7. வேத இதிகாச புராணங்கள் எதிலும் பெண்கள் பஞ்ச புராணம் பாடக்கூடாது என்று இருப்பதாக இதுவரை எவரும் குறிப்பி ட்டதும் இல்லை எழுதியதும் இல்லை.

8. சிவன் நிஷ்டையில் இருக்கும் பொழுது உமை அம்மையே மந்திரங்கள் ஓதுகின்றார்.

9. எமது வேதங்களில் கூறப்படாத சாதி சமயக் கட்டுப்பாடுகளை ஒரு சாரார் உண்டாக்கி எமது சமயத்தை நலிவடையச் செய்த தோடு அதன் வளர்ச்சியையும் தடை செய்கின்றனர்.

10. மணிவாசகப் பெருந்தகை இறைவனை வாயார வாழ்த்தும் போது முதலில் அம்மையே அப்பா என்றே அழைக்கின்றார்.

ஔவைப் பிராட்டியார் கைலை யை அடைந்த வரலாற்றை நோக்குவோம். ஔவையார், சுந்தரர், சேரமான் பெருமாளுடன் கைலை ஏகுவதை ஞானக்கண்ணினால் அறிந்தார். அப்பொழுது அவர் விநாயக ருக்குப் பூசை செய்து கொண்டு இருந்தார். துரிதமாகப் பூசை செய்தார். விநாயகப் பெருமான் ஔவையே நீ அமைதியாகப் பூசையைச் செய். எல்லோருக்கும் முன் நீ கைலயங்கிரியை அடை யலாம் என்றார்.

ஔவை சீதகளபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு பலவிசை பாட என்று தொடங்கும் விநாயகர் அகவலைப் பாடி முடித்துப் பூசை செய்தார். விநாயகப் பெருமான் தனது தும்பிக்கையினால் ஔவையைத் தூக்கிக் கைலை மலையில் சிவன் பாதத்தில் வைத்தார். ஔவை ஓர் பெண். ஓர் பெண்ணை இறைவன் பாதாரத்தில் விநாயகப் பெருமான் சேர்த்த ருளினார். இறைவனே பெண்க ளைப் பெருமைப் படுத்தி உள்ளார். இறை மகிமைகளைக் கூறும் பஞ்ச புராணங்களைப் பெண்கள் பாடலாம்.

*திருமதி க. கந்தசாமி*

---

அன்பின் ஆசிரியர் அவர்கட்கு,

கலசம் மணி 6 ஒலி 21ல் புதிய வேதம் எழுதுவோம் எனும் தலைப்பில் வெளிவந்த ஆசிரியத் தலையங்கம் நெஞ்சைத் தொடு மளவிற்குச் சிறப்பாக இருந்தது. காலத்திற்கு ஏற்ப எழுதியி ருந்தீர்கள்.

வளர்க உங்கள் தொண்டு

அன்பின்

**க. ஞானம்**

லண்டன்

---

பெண்கள் ஆலயங்களில் பஞ்ச புராணம் பாடலாமா? என்பது சம்பந்தமான கருத்துக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்




# WELCOM CENTRE

# STAR MUSIC

**WHOLE SALE AND RETAIL**

*** TAMIL HINDI * MALAYALAM * AUDIO, CD'S, VIDEO CD, VIDEO, MAGAZINE DISTRIBUTORS**




திரை, இசை நட்சத்திரங்களின் புதிய– பழைய திரைப்படப் பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, ஒடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759**

**209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH**

**TEL: 0181 472 6084**

**247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ**

# MARKANDAN & CO

## SOLICITORS

***Empowered to Administer Oaths***

Legal Aid

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters to appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# CAR, MINI-BUS, VAN RENTAL CHAUFFEUR DRIVEN SERVICE

It's Simple With Dimple

COMPETITIVE PRICES-NO HIDDEN EXTRAS
UNLIMITED MILEAGE 3 DAYS & OVER SPECIAL
WEEKEND RATES
AUTOMATICS, ESTATES & EXECUTIVES
ALSO AVAILABLE

OPEN MON TO SAT





**EUROPEAN HIRE ENQUIRIES WELCOME**



VISA MasterCard AMERICAN EXPRESS

## SUNDRIVE LTD T/A DIMPLE SELF DRIVE

# TEL: 0181 205 1200

**16 VARLEY PARADE EDGWARE ROAD COLINDALE LONDON NW9 6RR FAX: 0181 200 7426**

# TEL: 0171 243 4400

**Car Park, Poplar Place, Bayswater, London W2 4AS Fax : 0171 243 4408**

# சிவஞானத்திற்குப் பிரமாணம் உண்டா?

எழுதுகின்ற கரங்கள் எழுதிக்கொண்டே இருக்க, படிக்கின்ற கண்கள் ஓர் வியப்போடு படித்துக் கொண்டே இருக்கின்றன. பிறகு ஒரு கால கட்டத்தில் இங்கு படிக்கின்ற கண்கள் படித்தது போதுமென்று நினைத்து சிவச் சோம்பலால் உந்தப்பட்டுச் சும்மாவிருக்க, எழுதுகின்ற கரங்களோ விடாது எழுதிக் கொண்டே இருக்கின்றன. புதிய தாகப் பல வந்து கொண்டே இருக்க சிவச் சோம்பல் விலகு கின்றது. பெரு வியப்பு. சும்மாவிருந்த அக்கண்கள் இப்பொழுது எழுதுவோன் கண்ணோடு இசைந்து அற்புத நடனமாகப் புதிது புதிதாக மலரும் அனைத்தோடும் ஒன்றித்து வேறற நின்று இனந்தெரியாத ஓர் பேரானந்தத்தைச் சுவைத்தவாறு கிடக்கின்றது. பிறகு பார்த்து மகிழ்வதை விட்டு இப்பொழுது தானும் அவனோடு முற்றிலும் இசைந்து எழுதி எழுதி மகிழ்கின்றது. அதனில் வரும் ஆனந்தத்தைவிட வேறு ஆனந்தமும் இல்லை என்று உணர்கின்றது.

இது தான் சைவசமயத்தின் அடிப்படை. கரங்கள் நம்முடையன. ஆனால் அதனை ஆட்டி ஆட்டி எழுதி வைக்கின்றவன் இறைவன்.

பக்குவத்தில் உயர ஓர் கட்டத்தில் நாம் சிவச் சோம்பல் உற்று அசதி மேலிட ஒதுங்கி தனித்து வாழ விரும்பலாம். ஆனால் சிவ நடராஜப் பெருமானாகிய நம் இறைவனுக்கு சிவச் சோம்பல் இல்லை. அவன் அளவற்ற சக்தி ஊற்றாகிய அம்மையோடு யாண்டும் பிரியாவகை நின்று ஓயாது உணர்த்திக் கொண்டே இருக்க, நாம் ஒதுங்கினாலும் நம்மை ஒதுங்க விடாது ஆட்டிக் கொண்டே இருக்க நாமும் சிவச்சோம்பலை விட்டு சிவத் தொண்டர்களாக ஓயாது உஞற்றுகின்றோம்.

சைவன் என்பவன் ஓயாது உழைப்பவன். ஒழியாது உஞற்றிக் கொண்டிருக்கும் சிவபெருமானோடு ஒன்றித்து நிற்க சோம்பலுற்று எவ்வாறு சும்மா கிடக்க முடியும்? அப்படி யென்றால் சும்மாகிடக்கும் சுகம் என்கின்றார்களே பல சைவப் பெரியார்கள், அது என்ன?

சிவத்தொண்டனாக உயர்வதற்கு முன் சிவஞானத்தெளிவு உதிப்பதற்கு முன் தோன்றுகின்ற சிவஞானக் கேவல நிலையே அது. ஞானப்பிரகாசம் அறிவினை மயக்க அதில் சிக்குண்டு மேலே எழமுடியாது அந்த ஞானப் பிரகாசத்திலேயே தேனுண்ட வண்டெனக் கிடக்கின்ற சுகநிலையே அது. ஆனால் அதுவும் சிவஞானக் கேவல நிலையே என்பதால் முடிவான நிலை ஒன்றல்ல. சுத்தப்பிரகாசப் பெரு வெளி தரிசனம் அறிவினைச் சிற்றறிவாக ஆக்கும் ஆணவ மலத்தின் பிடியைத் தளர்த்த, அதனை அறிவினில் எழவிடாது செய்ய, அதனின் அறிவு, பரனுணர்வின் உலகப் பொதுவியம் கண்டும் சமரச உணர்வினைத் தந்தும் மகிழச் செய்ய, அதன் வழி எழுகின்ற சுகமே இந்த சும்மாவிருக்கும் சுகம். நெடிய பிரபஞ்சச் செலவில் நீக்குதற்கு மிக அரிதாகவே நின்ற இந்த ஆணவமலத்தின் கோரப்பிடியிலிருந்து விடுதலை கிடைக்க, இனி உழைக்க வேண்டாம் என்ற நினைவில் பரமான்மாவாகி விட்ட ஓர் ஆன்மா ஒரு தற்காலிக மகிழ்ச்சியை அடைந்து சும்மாவிருக்க விழைகின்றது.

மெய்கண்டார் விளம்பியவாறு இந்த சமயாதீதப் பரனுணர்வு அகத்தே எழுவதற்குக் காரணமாக இருப்பது என்றென்றும் எல்லார் அகத்தும் ஒளியாது சுடர்ந்து கொண்டே இருக்கும் இந்த சிவஞானமாம். இது சிந்தித்து அடையப்படுவதல்ல. அகத்தைத் துடைத்துத் துடைத்துச் சுத்தம் செய்யத் தானே சுடரும் ஒன்றாகும்.

இப்படிப்பட்ட சிவஞானத்திற்குப் பிரமாணங்கள் யாதும் உண்டா? வேதாகமங்களைப் பிரமாணங்களாகக் கொள்ள முடியுமா? சிவஞானத்திற்கு எந்த வேதமும் ஆகமமும் பிரமாணம் ஆகா. திருமூலர் ஆகமங்கள் எண்ணற்றன என்கின்றார். அப்படியாயின் எந்த ஆகமத்தைப் பிரமாணம் என்று கொள்வது? மேலும் அவை ஒன்றோடொன்று முரண்படுகின்றன. பிரமாணங்களாக நிற்பவை தம்முள் முரண்படா. வேதங்களைப் பிரமாணங்களாகக் கொள்ளலாமென்றால் வேதவாக்குகளிடையே முரண்பாடுகள் பல உண்டு. வேதங்கள் பிரமாணங்கள் இல்லை. வேதங்களாகிய உபநிடதங்களே அதுவும் மகா வாக்கியங்களே பிரமாணமெனில் இந்த மகாவாக்கியங்களின் பொருளை மாயாவாத அத்துவிதம் என்றும் விசிட்டாத்துவமென்றும் துவைதம் என்றும் பலவாறாகக் கூறி ஒருமித்த கருத்து அற்றதாகக் காட்டுகின்றனர்.

பகவத்கீதை போன்ற மறை நூற்களும் இவ்வாறே. அதனால் அவையும் சிவஞானத்தை முற்றிலும் எல்லா ஐயங்களும் திரிபும் அறவிளக்குந் திறத்தன அல்ல. அப்படியாயின் சிவஞானத்திற்கு என்னதான் பிரமாணம்?

சிவஞானத்திற்குப் பிரமாணம் சிவஞானமே–வேறொன்று

மில்லை. உண்மையில் சிவஞானம் பிரமாணதீதப் பொருள். அதனை அனுபவித்து மகிழும் போது தன்னையேதான் சிவஞான மென்று எந்தவொரு ஐயப்பாடுமின்றி உணர்த்திவிடும். ஒளி எவ்வாறு இருளை அகற்றும் முகத்தால் தன்னை ஒளியெனக் காட்டிக் கொள்கின்றதோ அவ்வாறே மெய்ஞ்ஞானமாகிய சிவஞானமும் சிற்றறிவின் அஞ்ஞானத்தை அகற்றும் முகத்தால், எல்லா பொய்ஞ்ஞானங்களை பொய்யென உணர்த்தும் திறத்தால் தன்னை மெய்ஞ்ஞானமாக விளக்கிவிடும். இப்படிச் சிவஞானத்தை அனுபவித்து அதன்வழி அதுவே சிவஞானம் என்று யார் அறிகின்றார்களோ அவர்களே மெய்கண்டார்கள் ஆகின்றனர். இவ்வாறான மெய்கண்டானாக உயர்வதற்குத்தான் இவ் வாழ்க்கை. அதற்காகத்தான் இறைவனும் ஓயாது உஞற்றியவாறு தனது பஞ்சகிருத்திய ஆனந்த சிவநடனத்தை ஆடிக் கொண்டேயிருக்கின்றான்.

இதுவே சைவ சித்தாந்தம் தரும் வாழ்க்கை விளக்கம்.

இப்படிப்பட்ட மெய்கண்டானாக உயர்வதற்கு என்ன வழி?

இந்த உலகினையே, அதில் வாழும்போது எழும் அனுபவங்களையே ஓர் மாபெரும் நூலாகக் காணவேண்டும். இவ்வாறு காணும்பொழுதே, இப் பேருலகையே மாபெரும் நூலாக அணுகும்போதே, அந்த முயற்சிக்கு அடிப்படையாக நம் அறிவினில் ஓர் அஞ்ஞானம், ஓர் இருள், ஓர் மறைப்பு உண்டென அறியவருவோம். அதே பொழுது அதனை நீக்க வேண்டும், நீக்கி சுத்தப்படுத்தவேண்டும் என்ற வேட்கையும் உடன் இருப்பதைக் காண்போம். இதுவே முத்தி முன்னறிவு என்பது. இவ்வறிவு முத்தியைப் பற்றிய முழு அறிவு அல்ல. விளங்கியும் விளங்காமலும் கிடக்கும் ஓர் முன்னறிவுதான். இது எப்படிப்பட்டதெனில், நுனித்தகு புலவன் யாத்த நூலொன்றினைப் படித்தறிந்து கொள முயலும்போது தன்னுள் அறியாமை இருப்பதை உணர்வதுபோன்றும், அந்த அறியாமையைத் தக்க உத்திகள் பெய்து அகற்றி மகிழவேண்டும் என்ற வேட்கையும் உடன் வருவதை உணர்வது போன்றதுமாகும்.

வேதாந்தப்போக்கிற்கு ஆளாகி உலகை ஓர் பொய் எனக் கொண்டு, உலகெனும் அந்த நூலொடு தொடக்குறாது இருக்கும்போது, அதனை அறிந்து கொள்ளவேண்டும் என்று எவ்வித முயற்சியும் எழாது போகின்றது. மேலும் வேதாந்தம் கழன்று அவ்வாறு தொடக்குற்ற பிறகு அதனை முற்றிலும் அறிந்தவனாயின் படித்தறிய வேண்டும் என்ற முயற்சி எழாமற்போய் விடுகின்றது. தொடக்குற்றுக் கிடக்கும்போது ஒரு பக்கம் அறிந்தும் ஒரு பக்கம் அறியாதும் இருக்கும்போதே அறியவேண்டும் என்ற முனைப்பு தானே எழுகின்றது.

இந்த முனைப்பு எழுவதற்கு அடிப்படையாக இருப்பது தன்னுள்தான் இதுவரை அறியாதிருந்த ஓர் அஞ்ஞானம் இருக்கின்றது என்ற ஓர் தெளிவுதான். இந்த அஞ்ஞானமே அந்த நூலோடு ஒன்றித்து வேறற நின்று எழுதியோன் கண்டவாறு தானும் கண்டு மகிழ்வதற்கு தடையாக இருக்கின்றது. எழுதியோனுக்கும் கற்போனுக்கும் இடையே ஓர் அந்நியத்தை தருவதாக இந்த அஞ்ஞானம் செய்து விடுகின்றது. எப்பொழுது தக்க உத்திகள் செய்து நூல் கூறியதைத் தெளிவறக் காண்கின்றானோ அப்பொழுதே இந்த அந்நியம் இல்லாது போகின்றது. இதுவே தொல்காப்பியர் அன்றே நமக்கு உணர்த்தியருளிய நூல்நெறி எனப்படும்.

சிவ வாழ்வு என்பது உலகமெனும் பெருநூலில் தொடங்கி அதனை அறிந்துகொள்ளாது அதனுள் அஞ்ஞானம் இருக்கின்றது என்ற தெளிவிற்கு ஆளாகி அந்த அஞ்ஞானத்தை தக்க தக்க உத்திகள் பயின்று நீக்கவேண்டும் என்பதை வாழ்வின் தலையாய நோக்காகக் கொள்ளுதலேயாகும்.

தேர்கின்ற உத்திகளும் இந்த அஞ்ஞானத்தைப் போக்க வல்லதாக இருக்கும்போதே இந்த உலகப்பேரேட்டின் எழுத்தாளனாகிய பஞ்சகிருத்தியனோடு அந்நியமின்றி ஒன்றித்து நின்று அவனோடு நாமும் ஆடமுடியும். அது பொழுது அமைகின்ற வாழ்க்கையும் ஆனந்த சிவத் தாண்டவ வாழ்க்கையாக மலரும்.

இது சும்மாவிருக்கும் சுகபோக வாழ்க்கை அல்ல. சிவத்தொண்டனாகி சிவமே நினைவாகி அவனோடு பிரிப்பின்றி ஒன்றித்து நின்று அவன் ஆட்சிக்கே தன்னை முற்றிலும் தந்து ஆட்டுவிக்க அதற்கொப்ப ஆடுவதாகும். அருளே வடிவாகிய பரமனொடு ஒன்றித்து நின்று ஆடும்போது செய்கின்ற அனைத்தும் அருள் வெளிப்பாடுகளாகவே இருக்கும்.

சிவனையே மனதில் விட்டகலாது இருத்தி அவன் காட்டுகின்ற வழியில் பிழையாது சென்று ஆடுவோர் ஆடவேண்டும், பாடுவோர் பாடவேண்டும். அமை தியாக அமர்ந்து ஆழச் சிந்திப்போர் எழுதவேண்டும். தானம் செய்வோர் அவன் பெயரில் தானம் செய்யவேண்டும். கோயில் எழுப் புவோர் திறன்பட அதனை எழுப்பவேண்டும். இன்னும் இன் னோரன்ன சிவத்தொண்டுகளில் எதனையாவது செய்து கொண்டி ருக்கவேண்டும். அப்பொழுதான் அயராது ஆடிக்கொண்டே இருக்கும் அவனை அண்ட முடியும். அணுக முடியும். பிறகு ஒன்றாகி நின்று சிவஞானத்தை அனுபூதியாகப் பெற்று மகிழவும் முடியும்.

# குமரன்ஸ்
## தமிழ்க்கடை

KUMARANS

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்.

KUMARANS

# கட்டுரைப் போட்டி

**கலசத்தின் 25ஆவது மலர்**
வெளியீட்டையொட்டி கலச வாசகர்கள் மத்தியில்
இப்போட்டியினை நடாத்த உள்ளோம்.
இப்போட்டி மூன்று பிரிவாக நடைபெறவுள்ளது

**பிரிவு 1**
**( 12 வயதிற்குட்பட்டவர்கள்)**
தலைப்புகள்:
எனது சமயம் **(My Religion)**
நான் விரும்பும் கடவுள்
**(The God I like)**
நான் பார்த்த கோயில் திருவிழா
**(About a temple festival I saw)**
தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம்.
கட்டுரைகள் கலசத்தின் ஒரு பக்கத்துக்குக்
குறையாமல் இருக்கவேண்டும்
**பரிசு : தங்கப்பதக்கம்**

**பிரிவு 2**
**( 12 – 21 வயதுதுக்குட்பட்டவர்கள்)**
தலைப்புகள்:
**சமயம் எங்களுக்குத் தேவையா?**
**(Why do we need religion?)**
இந்து சமயம்
**(Hinduism)**
**கோயில்கள் எங்களுக்குத் தேவையா?**
**(Do we need temples?)**
தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம்.
கட்டுரைகள் கலசத்தின் இரு பக்கங்களுக்குக்
குறையாமல் இருக்கவேண்டும்
**பரிசு : தங்கப்பதக்கம்**

**பிரிவு 3 ( 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்)**
சமயமும் சமய குரவரும் ,இருபத்தோராம் நூற்றாண்டில் சைவம், கோயில் வழிபாடு,
நமது மதம் இக்காலத்துக்கு ஏற்ப மாறியிருக்கிறதா?,
மதம் மனிதனுக்கு அபின் என்ற கூற்றை ஆராய்க
**தமிழில் மட்டும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**
**கட்டுரைகள் கலசத்தின் நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்**
**பரிசுகள்: £100, £70, £30**

**கட்டுரைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி**
**25 - 10- 1998**
**கட்டுரை அனுப்பவேண்டிய முகவரி**
**KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford,Essex, IG5 0JD**

# CHILDREN'S KALASAM

**The following pages contain features and articles for and by children, hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We welcome views and suggestions from children and parents.**

**- Editor -**

**To make the children's Kalasam more appealing of relevant to our younger generation living in the western world, we need direct input of the youth in the Kalasam Editorial commitee. If you are able to contribute in anyway in this respect please contact**

**Mr M. Natkunathayalan- The Editor on 0181 550 4233**

## MURUGA NAYANAR

### (Swami Sivananda)

To do Archana with flowers mentioned in Siva Agamas, to offer flower garlands to the Lord and to repeat the Panchakshara Mantra is the ideal form of worship. Panchakshara Mantra is considered a very great Mantra because it occurs in the centre of the Sri Rudradhyayi, which occurs in the middle of the middle Khanda of Yajur Veda. He who does Japa of this Mantra is at once relieved from the disease of birth and death.

Muruga Nayanar excelled in this worship. He was born in Thirupukalur, made famous by many other Nayanars also. Daily he would wake up well before sunrise, take bath, wear the sacred ash on his forehead, do his Nithiya Karmas, and go to the garden with a basket. Repeating the Panchakchara he would collect flowers, and as mentioned in the Siva Agamas make colourful garlands and offer to the Lord.

One day the great Gnana Sampanthar came to his place. Muruga Nayanar invited him and worshipped him and won his favour. Sampanthar took him as his dearest friend. Muruga Nayanar got the great good fortune of attending Sampanthar's wedding when he, the bride and all others (including Muruga Nayanar) got merged in the Divine Effulgence of the Lord. Hence the Kural says: ' Rarest of all rare things is to win the great to one's side by courting it.' Muruga Nayanar's devotion won for him Sampanthar's friendship, and, through that, God-realisation.

## TAMIL NEW YEAR

### Month - Chitrai

**Occurence**

The New Year's Day for the Tamil speaking people generally occurs on the 14th of April. This is the first day of the Tamil month of Chitrai. This is the day when the Sun is considered to enter the constellation Aries(Mesham) of the Zodiac after compleating one full cycle.

**Observance & celebration**

On the previous day the house is cleaned

and purified by sprinkling holy water obtained from a temple priest. The home altar is cleaned and laid out for worship for the New Year's Day. A 'pumakumbam' can be set in the home altar. The home altar is decorated with kolams and fresh flowers. All items necessary to do a home puja is prepared at the altar.On New Year's Day the family gets up very early in the morning and must set their eyes on all the auspicious items at the home altar. After having a bath everyone wears new clothes for an elaborate puja at the home altar. Fresh fruits and special neivaydium is offered to the family deity. After the puja the family sings religious hyms like Thevarams, this is followed by serving of prasadams.

After the puja at home the people normally visit the nearest temple for the special pujas. In some temples reading of the 'punchangam' is an important ritual on this day. The hindu Almanac for the New Year or the Panchangam' is an important ritual on this day.

The Hindu Almanac for the New Year or the Panchangam is published at this time and begins its calculation from this day in April. It lays down in detail the positions of the planets and starts on this day and proceeds to give a reading of the significance of these signs.

The name panchanga means five parts. They are the days of the week, tithi or phase of the moon, yogam, nakashatram and karanan. These five components of the calender figures are prominent in selecting any suitable occasion for an auspicious purpose. At an auspicious hour in the local temple , the temple priest performs a short puja for the new almanac or panchangam and foretell many things affecting the rural life such as the rains, harvesting of agricultural products , to the people present in the temple.

## The Cat and The Parrots



A cat came to know that some parrots were unwell in their home. He dressed himself as a doctor and went to the residence of the parrots. He knocked at the door and said " I learn that you are unwell. Please open the door. I shall give you medicine and cure you of your ailment.

The parrots knew the wicked intention of the cat. they said " We are all well and happy. Thank you for your offer. If you do not make your appearence we will be quite satisfied.

**UNSOLICITED OFFER OF HELP HAS A MOTIVE BEHIND IT**

இச் சிறுவர் பகுதிக்கான
செலவின் ஒரு பகுதியினை
3 நிறுவனத்தினர் மனமுவந்து
உதவி செய்துள்ளனர்.
**UMA CONVENIENT STORE**
**Mr. A.K.Kumaravel**
**(All Drinks Offlicence)**
**And**
**வாசன் அச்சகம்**

# சிறுவர் வரைந்த சித்திரங்கள்



## Murgan

Murgan is the son of lord Siva. He has a brother called Pilliar. Murgan has two wifes one is called valli and the other is called Theyvana. Murgan has six heads. We always pray murgan. Murgan is a hindu god.

by
Ramanan Natkunathayalan
Age 11



## Pilliar


Pilliar has a elephant face. He likes mangoes and sweets. We everytime pray to Pilliar First. I always Pray to Pilliar at mornings and evenings. Pilliar is the oldest son of Lord Shiva. Pilliar listens to our Prayers. Pilliar is a Hindu god.

Name Mukunthan Srikantharajah
- 0181-543-2126 - Tel
age - 7 Years 52 KINGSLEY ROAD, WIMBLEDON SW19

# SRI RAMAKRISHANA


## (CONTINUATION FROM LAST KALASAM)

For six intense years Sri Ramakrishna trained Naren in the path of spirituality. Sri Ramakrishna said in his last days that Naren would teach others.





When Naren protested then Sri Ramakrishna said, " You will have to do. It is mother's will"

Just 3 days before his passing away Sri Ramakrishna was lying in the bed, suffering from throat cancer. Naren alone was in the room. Then a thought arose in his mind.





Naren became ashamed that he ever doubted his great master. He was now fully convinced that for the good of humanity God had taken birth in human form as Sri Ramakrishna.

Day by day Sri Ramakrishna's health deteriorted. He was not even able to speak. Then he asked for a piece of paper and wrote on it " Naren will teach mankind"



Time and again he made it clear to his devotees that his message would be broadcast to the world through the mouth-piece of swami Vivekananda.

On 16th August 1886, Sri Ramakrishna uttered thrice the name of mother Kali and breathed his last.




Only the physical body disappeared but he lives eternally appearing to all who call on him sincerely.

His body was burnt in burning ghat.

The ashes were preserved by his disiples.




# THE SPORT OF LORD SHIVA


It was the tradition at madurai to worship Lord Shiva with special Puja every year in the north of April. Lord Indra who used to come down and worship the lord every day was being delayed due to this special worship. King Abhisheka Pandya used to offer special puja during this month





To see the sport of the Lord, Varuna called the seven oceans.




Immediately the waves arose to great heights . Consequently, there was a great storm which uprooted the trees and buildings of the city,. The people were terrified.




The king Abhisheka Pandya being terrified, took shelter at the foot of the Lord.
6
The Oceans have become calm. Seven clouds! You pour heavy rains on Madurai and destroy the city.
Then, he heard a divine voice...
7
Pandya! Don't be disheartned. I will send the seven clouds which will calm the ocean.
Glory be to the Lord!
The next moment the seven clouds controlled the ocens. At that time Varuna came there.
8
O Lord! What a test! Is this city where you reside going to be destroyed?
There was a thunder storm, followed by heavy rains
9
The king was praying to the Lord in the temple. Then....
10
O Clouds! Control the rain and see that water does not enter the city
Immediately, obeying the command of Lord Shiva, the clouds disappeared and the rain stopped.
11
O! Lord Shiva! Forgive me I did this to see your divine sport.
To repent for his sin, Varuna bathed in the famous tank of Madurai and worshiped Lord Somasundara.
12
What boon do you seek? Your pain will disappear soon
O Lord! I have no more desire. You cured my disease and gave me your vision
Abhisheka Pandya at the temple.
13
O Lord! I am amazed at your divine sport. You always protect one who takes refuge in you
May you have pure devotion

# ஆத்தி சூடி

–அவ்வையார்–



## அறஞ்செய விரும்பு

அறம் – தருமத்தை, செய– செய்தற்கு, விரும்பு– நீ ஆசை கொள்ளு

## ஆறுவது சினம்

ஆறுவது–(உன்னுள்ளே) தணிய வேண்டுவது சினம்– கோபமே ஆம்

## இயல்வது கரவேல்

இயல்வது–(கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல்– (நீ வறுமையினாலே யாசிப்பவர்களுக்கு) ஒளியாதே

## ஈவது விலக்கேல்

ஈவது– (தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்– நீ தடுக்காதே

## உடையது விளம்பேல்

உடையது – (உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்–( நீ மற்றவர் அறியும்படி) சொல்லாதே

## ஊக்கமது கைவிடேல்

ஊக்கமது–(செய் தொழிலில்) மனஞ் சோராமையை, கை விடேல்– நீ கை விடாதே

## எண்ணெழுத் திகழேல்

எண்– கணித நூலையும், எழுத்து–இலக்கண நூலையும், இகழேல்–நீ இகழ்ந்து தள்ளாதே

## ஏற்ப திகழ்ச்சி

ஏற்பது–(ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி–பழிப்பாகும்

## ஐய மிட்டுண்

ஐயம்–பிச்சையை, இட்டு–(இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்–நீயும் உண்

## ஒப்புர வொழுகு

ஒப்புரவு–உலக நடையை அறிந்து, ஒழுகு–(நீ அந்த வழியிலே) நட.

## ஓதுவ தொழியேல்

ஓதுவது–(அறிவு நூல்களை) வாசிப்பதை ஒழியேல்–(நீ மரணபரியந்தம்) விடாதே.

## அவ்வியம் பேசேல்

அவ்வியம்– பொறாமை வார்த்தைகளை, பேசேல்– நீ பேசாதே

## அஃகஞ் சுருக்கேல்

அஃகம்–தானியத்தை, சுருக்கேல்–(அதிக இலாபத் துக்காகக்) குறையாதே.

## கண்டொன்று சொல்லேல்

கண்டு–(ஒன்றைக்)கண்டு, ஒன்று–வேறொன்றை, சொல்லேல்–(நீ சாட்சியாகும் போது) சொல்லாதே(கண்டபடியே சொல் என்பது கருத்து)

## நப்போல் வளை

நப்போல்– நகரம்(தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருத்தத்தைத் தழுவுதல்)போல வளை–(நீ பரயோசனமுள்ளவனாயிருந்து உன் இனத்தைத் தழுவு)

## சனி நீராடு

சனி–சனிக்கிழமைதோறும், நீர் ஆடு–(எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலை முழுகு(புதன் கிழமையிலும் முழுகலாம்)

(இன்னும் வரும்....)

# மெய்ஞ்ஞான ஒளியைத்தேடி


## சுவாமி யோகேஸ்வரானந்தா

உதாரணமாக முருகக் கடவுள் பழநியில் சென்றமர்ந்த புராண வரலாற்றைப் பாருங்கள். பெற்றோரிடம் பிள்ளை கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு ஓட வேண்டும் என்ற உதாரணத்துக்கா இந்த வர லாற்றை எங்கள் யோகிகள் படைத் தார்கள்? இல்லவே இல்லை! எது உண்மை , எது மாயை, அந்த உண்மை எங்கே இருக்கின்றது என்ற உன்னதமான தத்துவத்தை உலகுக்குச் சுவை பட எடுத்து ரைப்பதே இக்கதை. பெற்றோரை உலகமாக மதித்த விநாயகனுக்கு அறிவு விளக்கம் இருந்ததற்கான பரிசே மாங்கனி. அந்த அறிவு விளக்கம் இல்லாமல் உடலால் உல கைச் சுற்றி வந்த முருகனுக்கு ஞானோபதேசம் செய்த வரலாறே இது. சாதாரண பழத்துக்கா கோபித்துச் சென்றாய். நீயே பழம், ஞானப்பழம். உனக்கேன் வேறு பழம்? என்று கூறிப் பிரம்மோபதேசம் செய்கிறாள் அன்னை. இதுவே பழநி பிறந்த வரலாறு. சர்வலோக மாதாவாகிய உமையவள் உலகுக்கு எடுத்துச் சொன்ன உண்மை இது தான். ஆண்டவன் ஜீவாத்மாவாக உன் இதயத்தில் அமர்ந்து ஒளி வீசிக் கொண்டிருக்கின்றான்.

இதையறியாமல் அவனைத் தேடி எங்கு செல்கின்றாய் என்று கூறி எங்களைத் தடுத்தாட் கொள் கின்றாள். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதால் தான் ஞானிகளும் யோகிகளும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று வாழ்கின்றார்கள். அனைத்து ஜீவ ராசிகளிலும் பரமாத்மாவின் அம்ச த்தைக் கண்ட பிறகு மனிதனை, ஜாதி மத இன சமயம் என்ற மாய எல்லைகள் கட்டுப்படுத்துவதில்லை. அவன் கால பேத வர்த்தமா னங்களுக்கு அப்பாற்பட்ட சர்வலோக புருசனாகின்றான். உலகிலுள்ள இந்த எல்லைகள் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட மாய நிலை. நாம் அனைவருமே தெய்வத்தின் அம்சங்கள் என்ற உண்மையை அறிவதே ஆன்மீக வாழ்வின் முதற்படி. முதலாவது சாதனை. இந்த நிலையை எய்தியதால் தான் கவிஞானி ரவீந்திரநாத்தாகூர் ஆண்டவன் படைப்பில் அனைத்தும் தெய் வீகமே என்று கீதாஞ்சலி பாடினார். எங்கெங்கும் காண்பது சக்தியடா என்று பாரதியார் பாடினார். அவர் தேசத்தை பராசக்தியாகவும் சேவகனைக் கண்ணனாகவம் கண்டு களித்தார். நாமெல்லாம் அருவருத்து ஓதுக்கும் காக்கையின் சிறகிலே கூடக் கண்ணனையே கண்டார். உண்மையறியும் தன்மையை அதாவது நான் தெய்வத்தின் அம்சம் தெய்வாம்சம் பொருந்தியவன் என்ற உண்மையை யாவரும் அறிந்து ஆன்மீக வாழ்வைத் தொடங்கலாம். ஆனால் இந்த உண்மையை அறிய விடாது தடுப்பது யாது? சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணாக எடுத்துக் காட்டப்பட்ட இந்த ஞானக் கண் எங்களில் திறக்கப்பட முடியாமல் குறுக்கிடுவது என்ன? அதுவே அவித்யா. அவிவேகம் அல்லது அஞ்ஞானம். இந்த உலகில் பிறவி எடுத்து எமது கர்ம வினையைத் தீர்க்கும் நோக்கத்திற்காகத் தரப்பட்டதும் ஐம்புலன்களின் சேர்க்கையுமான இந்த உடலையே நாங்கள் நான் என்று எண்ணு கிறோம். உண்மையில் நான் பரமாத்மா தான் என்பதை முற்றாக மறந்திருப்பதால் தான் நான் இந்த உடலுக்குரிய மானுடன் என்று மனிதன் எண்ணுகின்றான். இந்த எண்ணத்தின் அடிப்படையிலே தான் அவன் சர்வகாலமும் செயற்படு கின்றான். அதன் பலனாகவே உணர்ச்சி வசப்பட்டுப் பரபரப்பும் அடைகின்றான். நிதானத்தை இழக்கின்றான். நல்வினை தீவினைப் பயன்கள் அவனை ஒட்டிக்கொண்டு மறுபடியும் மறுபடியும் பிறப்பெடுக்க வைக்கிறது. இதுவே தன்னை உணராத அஞ்ஞான நிலை. இந்த உறக்க நிலையிலிருந்து மனித னை விழிப்படையச் செய்வதற்காகவே ஞானி சோக்கிரட்டீஸ் உன்னையே நீ அறிவாய் என்று உலகுக்கு அறை கூவினார். வேத வியாசர் மகாபாரதம் என்ற காப்பியத்தைத் தந்தார். அதில் அருச்சுனன் என்ற பாத்திரம் மூலம் கிருஸ்ண பரமாத்மாவின் வாயி லாகக் கீதோபதேசம் செய்தார். அருச்சுனன் ஸத்திரிய குலத்தைச் சேர்ந்த அரசன். போர் செய்வது அவனுடைய குலதர்மம். அவனோ போர்த்திறமை சாகஸங்களில் முதன் மை பெற்றுத் தனது ஆசிரியரான துரோணாச்சாரியாரால் நேசித்துப் பாராட்டப்பட்டவன். பல யுத்தங்களைச் செய்து வெற்றி வாகை சூடிய மாவீரன். போர்க்களமும் , மரணமும் இரத் தமும் அவனுக்கு ஒன்றும் புதிய வையல்ல.

(இன்னும் வரும் )

கிழக்கு இலண்டன் நியூகாம் பகுதியில்
Dental Surgery சம்பந்தமான
சகல பிரச்சினைகளுக்கும் அணுகவேண்டியவர்



டாக்டர்
டேவிட் ஏ. பழனிவேல்
* Restorative Dentistry
* Prosthetics
* Orthodontics
* Endodontics &
* Surgical Dentistry

127 Greengate, London E13 0BG
Tel: 0181 472 9429

VASAN & COMPANY
Auditors & Accountants

Specialists in
* Accounts Preparation
* Book Keeping Services
* VAT, PAYE, Self Assessment
* Tax Planning * Tax Investigation

78 BECKENHAM ROAD, BECKENHAM, KENT BR3 4RH
TEL: 0181 658 8867 FAX: 0181 658 8177

சிவஞான போதத்தை 39 சூர்ணிகளாக வகுத்துக் காட்டியுள்ளார்கள். இம் முப்பத்தொன்பது சூர்ணிகைகளாக திருவெம்பாவைச் சொற்றொடர்கள் கொண்டு துல்லியமாக விளக்கிக் காட்டலாம்.

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை**
**யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து**
**போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே**
**ஈதே எம்தோழி பரி ஏல் ஓர் எம்பாவாய்**

பாவையின் முதற் பாடல் இது. அவத்தைகள் ஐந்தும் இங்கு பேசப்பட்டுள்ளன. ஜாக்ரம், ஸ்வப்நம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் ஆகிய இவை ஐந்து அவத்தைகள். முதற் பாடலில் வருகின்ற கேட்டேயும்– ஜாக்கிரம். மெய்ம்மறந்து–சுவப்நம் வளருதியோ–சுஷுப்தி ஏதேனும் ஆகாள்–துரியம் கிடந்தாள்–துரியாதீதம்

சிவனுடைய தொழில்கள் ஐந்து. அவை. தோற்றம். திதி, ஒடுக்கம். திரோபாவம். அருளல் என்பவை. ஐந்தவத்தை உடைய ஆன்மா ஐந்தொழிலானோடு அத்துவிதக் கலப்பு உறுதலுக்கே பாவை வழிகாட்டு கிறது. முதற் பாட்டில் ஐந்து அவத்தைகள் பேசப்பட் டமைபோல், முடிவான 20–ஆம் பாட்டில் ஐந்தொழில்கள் பேசப்பட்டுள்ளன.

**தோற்றமாம் பொற்பாதம்–தோற்றம்**
**போகமாம் பூங்கழல்கள்–திதி**
**ஈறாம் இணையடிகள் –ஒடுக்கம்**

நான்முகனும் காணாத புண்டரீகம்–திரோபாவம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்– அருளல். ஆன்மா அநாதியான வஸ்து. பதியினைப் போல் பசு, பாசம் ஆகியன அநாதியானவை. பசு பாசத்வ ஸம்யோகாத் என்னும் வசனத்தினால், அநாதியே பசுத்து வமாகி ஆணவ ப்ரதிபந்தத்தினால் ஜீவான் மாக்கள் எல்லாம் பசு எனப்பெறும் என்பது சிவாக்கிர யோகிகள் கூற்று. கேவல நிலையிலிருந்து ஆன்மா சுத்த நிலையை அடைய எடுக்கின்ற யாத்திரை, நீண்டதும் நெடியதுமான ஒன்று. இதன் தன்மையை ஆன்மா சுலபமாக உணர் வதில்லை.

**நீண்ட வழியும் நெடுமூச்சு ஒன்றும் நின்று எரியும் சுடரும் ஈண்டு உனது அருளே** என்கின்றார்

இதற்கு என்னே பொருள் ஐயா! என்று பாசத்திற்கு உட்பட்ட பசு கேட்கும்.

ஜீவ யாத்திரையின் நெடிய போக்கையும், அதனால் தாம் அடைந்த வெக்கையையும் மாணிக்கவாசகர்,

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்**

என்று வருணிக்கிறார்.

ஆயிரங்கால் மரவட்டையாய், நூறு கால் பூரானாய், பல்கால் ஜலமண்டலியாய், எட்டுக்கால் பூச்சியாய், அறுகால் வண்டாய், நாலுகால் திர்யக்காய், இரண்டுகால் மனிதனாய், காலில்லாப் புழுவினமாய், நீர்வாழ் ஜந்துவாய், ஊர்ந்தும், நடந்தும், நீந்தியும் காலத்தைப் போக்கியிருக்கிறோம். நம்முடைய நடையினால் இம்மண்ணில் சூடு உண்டாக்கியிருக்கிறோம். பிறந்து இறந்து சடலமாகிப் போனபோது அச் சடலங்கள் கொளுத்தப்படவே வானும் புகையுண்டு போயிற்று.

எண்ணற்ற ஆன்மாக்களைக் கர்ம வினைக்கு ஈடாகப் பிரமன் 84 இலட்சம் பேதங்களில் உருட்டிப் போடுகிறான். நம்முடைய பிறப்பினால் பிரமன் கைகள் சூடுண்டு கிடக்கின்றன. ஒருதாய் இருதாய்ப் பலகோடியதாய் நமக்கு அன்னை மார்களும் எண்ணற்றோர். ஒவ்வொரு கர்ப்பமும் தாய் வயிற்றில் சூடேற்றப்படுகின்றன. நடந்து நடந்து நம் கால்களும் சூடேறிக் கிடக்கின்றன. வெக்கை. வெக்கை, வெக்கை. எங்கு பார்த்தாலும் வெக்கை. இந்த வெக்கை தணிய வேண்டும்.

**மண்ணும் தணலாற வானும் புகையாற**
**எண்ணரிய தாயும் இளைப்பாறப் – பண்ணுமயன்**
**கையாற வும்மடியேன் காலாற வும்கண்பார்**
**ஐயா விருவையாறா**

**கலசம் 21 இன் தொடர்ச்சி........**

# இருபதே பன்னிரண்டு

சேக்கிழார் அடிப்பொடி திரு. டி.என். ராமசந்திரன்

என அவ்வூரைத் தஞ்சமடைந்த பட்டினத்துப் பிள்ளை அருளியுள்ளார். ஆன்மா படும் வெக் கைக்குப் போக்குவீடு காட்டுகிறார் மாணிக்கவாசகர்.

**மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்**
**கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி**
**ஐயா! வழியடியோம் வாழ்ந்தோம் காண்! ஆரழல்போல்**
**செய்யா! வெண்ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்**
**மையார் தடங்கண் மடந்தை மணவாளா!**
**ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்**
**உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்**
**எய்யாமற் காப்பாய் எமையேல் ஓர் எம்பாவாய்**

இறைவா! பக்குவத்திற்கு ஏற்பப் படிப்படியாக அழகாக ஆட் கொண்டருளும் திருவிளை யாட்டினாலே உய்தி கூடுகின்ற வர்கள் பிழைத்துக் கதி சேரும் வகைகளில் எல்லாம் நாங்களும் படிப்படியாக உய்திகூடி முடித்தோம் **மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றோம் ,** அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே என்ற சாத்திர விதிப்படி இதுவே பாவையின் சாரம்.

தத்துவப் படிகள் கடந்து, இறை அருளில் முக்குளித்து எழுந்து, உய்தி பெறும் பாங்கே ஆன்மா வினுடையதாம்.

ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொ ழிந்தோம் என்றாலும் முத்தியிலும் கூட மும்மலம் உண்டாம். ஆகவே, எய்யாமற் காப்பாய், எமையெலோர் எம்பாவாய் என்கி றார் மணிவாசகர். சைவ சித்தாந்தத்தின் பீடபூமி அத்வைதம். ஆன்மா சார்ந்ததன் வண்ணம். எதைச் சார்ந்து உள்ளதோ அத்தோட அத்துவிதப்பட்டுக் கிடக்கும். ஒன்று ஆணவத்தோடு அத்துவிதப்பட்டுக் கிடக்கும். இன்றேல் இறையோடு அத்துவிதப்பட்டுக் கிடக்கும்.ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெஞ்ஞானத்தாணுவினோடு அத்து விதமாகுநாள் எந்நாளோ?

என்பது தவராஜயோகியராம் தாயுமானவர்தம் திருவாக்கு.


சகல நிலையிலும் ஆன்மா கேவலத்தில் பாயும். சுத்தத்தையும் தொடும். இதையே சித்தாந்தப்படுத்தித் திருவெம்பாவை என்று ஆக்கி அருளியுள்ளார் ஆளுடை அடிகள்.

கேவலத்தைச் சுட்டுகின்ற அடிகளின் சொற்களும் பாடல் எண்களும் வருமாறு:

1. வளருதியோ (1)
2. வன்செவியோ நின்செவிதான் (1)
3. போதார் அமலிக்கே நேசமும் வைத்தனையோ (2)
4. இன்னம் புலர்ந்தின்றோ (4)
5. கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே (4)
6. உணராய் உணராய் காண்(5)
7. இன்னந் துயிலுதியோ(7)
8. என்னே துயிலின் பரிசு (7)
9. பாடினோம் கேட்டிலையோ(8)
10. வாழி ஈதென்ன உறக்கமோ (8)

சகல நிலையிலும் ஆன்மா சார்ந் ததன் வண்ணமே. இந்நிலையில் ஆன்மா பாசத்தின்பாலும் அணுகும், பரமன்பாலும் அணுகும். அதைத்தான் பாசம் பரஞ்சோதிக் கென்பாய் என்றும், இப்போதார் அமலிக்கே நேசமும் வைத்தனையோ என்றும் அடிகள் குறிப்பிடுவார்.

(இன்னும் வரும்..........)



*With Best Compliments From*

# Raja & Co

**SOLICITORS**

**ADMINISTRATORS OF OATHS**

**295, BALHAM HIGH ROAD**
**TOOTING BEC, LONDON SW17**
**TEL: 0181 682 2585 FAX: 0181 682 2575**

# இந்துக்களே சிந்தித்துப் பாருங்கள்!!

**வித்துவான் க.ந.வேலன்**

உலகில் உள்ள ஒவ்வொரு தேசத்திலும் அவ்வத் தேசத் தின் இயற்கைக்குப் பொருத்த மாகவே உயிரினங்களும் தாவரங் களும் மனித இனங்களும் அமைகின்றன.

மனிதர்களின் நிறம் உடலமைப்பு முதலிய புறத்தோற்றம் முதலி யனவும் அவ்வத்தேச இயற்கைக்கு ஏற்பவே அமைகின்றன.

இதனை இந்து சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் கூறுவ தானால் நமக்குப் பொருத்தமான தனு கரண புவன போகங்கள் முன்னமே நம்வினைக்கு ஏற்ப அமைந்து கிடக்கின்றன. இந்த உண்மையினையே சிவயோக சுவாமிகள் எப்பவோ முடிந்த காரியம் எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இவற்றின் மனிதனின் புறத் தோற்றம் மாத்திரமன்றி கரணம் என்று கூறியுள்ளபடியால் அகத் தோற்றமும் எப்பவோ முடிந்த காரியமாகிவிட்டது

இதனையே சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் இருந்த அன்பர் ஒருவருக்கு காசியில் இருந்து எழுதிய கடிதத்தில் இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பா ணத்தார் எல்லாருக்குமாகக் கருமாதிகள் எல்லாம் செய்து முடிந்துவிட்டன.

என மற்றொரு விதமாக எழுதியுள்ளார். இதுவும் நமக்கு புரியவில்லை.

இவற்றால் நாம் அறிய வேண்டிய உண்மைகள் பல நமக்குப் பொருத்தமான அடிப்படைத் தேவைகள் நமக்கேற்ற மொழி முதலியன அமைந்து நமது அகப்புற வளர்ச்சியை வளர்ப்பதுபோல நமது ஆன்மாவை வளர்க்கும் சமயமும் இங்கேயே இயற்கையாய் அமைந்து கிடக்கின்றது என்பது அவற்றுள் ஒன்றாகும்.

இன்று நமது நாட்டில் நமக்குப் பொருத்தமற்ற அந்நிய உண வுகள் அந்நிய உடைகள் அந்நிய மருந்துவகை கள் அந்நிய மொழிகள் முதலி யன புகுந்து நமது அகத்தையும் புறத்தையும் கெடுத்து நோய் வாய்ப்படுத்தி இருப்பதை நம்ம வரில் படித்தவர்களும் நன்கு உணரவில்லை.

இன்று நம் நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன் வந்த பௌத்தம் 8 ஆம் நூற்றாண்டளவில் வந்த கிறிஸ்தவம் முதலிய அந்நிய மதங்கள் நிலவுகின்றன. இவற்றில் பௌத்தம் இந்து சமயம் பெற்ற பிள்ளையாதலால் இலங் கையில் அரசமரம் போலத் தளிர்விட முடிகின்றது. ஏனைய மதங்கள் மதமாற்றம் செய்வதன் மூலம் தம்மைப் பலப்படுத் திவருகின்றன. கடந்த 800 ஆண்டுகளாக வணிக பலத்தோடு இஸ்லாமும் 400 ஆண்டுகளாக ஆட்சிப் பலத்தோடு கிறிஸ்துவமும் இங்கு நிலை கொள்ளப் பெருமுயற்சி எடுத்து வந் துள்ளன. இன்று இலங்கையில் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் புகுத்தப்பட்ட பௌத்தத்தைப் பின்பற்றுவோர் ஏறக்குறைய 10,288 325 பேர், இந்துக்கள் 2,297,806, கிறிஸ்துவர்கள், 1,130,568 ,இஸ்லாமியர்கள் 1,121,717 பேர் எனப் புள்ளி விபரம் கூறுகின்றது.

இலங்கைத் தமிழர்களிடமும் இந்திய வம்சாவழியினரிடமும் உள்ள பிரச்சனைகளைத் தமக்குச் சாதகமாக்கி இவை மனமாற்றத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்து பௌத்த மதங்கள் இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கும் இஸ்லாம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் கிறிஸ்து வம் மேல் நாடுகளுக்கும் உரிய இயல்பான சிந்தனைகளைக் கொண்ட மதங்களாகும் அவற்றை மற்றைய நாடுகளில் பரப்ப முயலுவது தவறு என்பதை இந்துசமயம் தவிர்ந்த ஏனைய மதத்தினர் உணரவில்லை.

உலகில் தோன்றிய எந்த ஞானியாவது தத்தம் மதங்க ளுக்கு மற்ற மதத்தினரை மதமாற்றம் செய்யவேண்டுமெனக் கூறியதுண்டா? நாம் இறைய ருளால் பெற்ற அருளை மக்கள் நலன் கருதிப் பரப்புங்கள் என்று சொன்னார்களேயன்றி மதமாற்றம் செய்யுங்கள் என்று அவர்கள் எங்கேயாவது கூறியுள்ளனரா?, போதி மாதவனும் யேசுபெருமானும் தம் சீடர்கள் மூலம் அன்பு வழியில் மக்களைப் பயிற்று வித்தனர். ஆனால் சீடர்களோ மத மாற்றத்தில் ஈடுபட்டு

மதத்தை ஸ்தாபன ரீதியான கட்டுக் கோப்படைந்த அதிகார பீடமாக் கிவிட்டனர். இநற்குக் கட்டுக் கோப்புக் கத்தோலிக்க மதம் ஓர் உதாரணமாகும். ஆனால் வத் திக்கானில் அது ஒரு கத்தோலிக்க அரசையே நடத்துகின்றது.

கட்டுக்கோப்போடு கூடிய ஸ்தாபனரீதியாக இயங்காத மதம் இந்துமதமாகும். இதுவே இந்து மதத்தின் பெலவீனமும் பெலமு மாகும்.

இந்நிலையினால் மதங்களால் ஏற்பட்ட சீரழிவுகளை உணர்ந்த கால்மாக்ஸ் என்னும் சித்தர் நிர்மாணிக்கப்பட்ட மதம் மக்க ளுக்கு அபின் போன்றது என்று கூறினார். இந்த வாசகத்திலுள்ள நிர்மாணிக்கப்பட்ட என்று சொல்லை நீக்கிவிட்டு மதம் மக்களுக்கு அபின் போன்றது எனக் கால்மாக்ஸ் கூறினார் என மதத்தால் பிழைப்பு நடத்துவோர் கூறி வருகின்றனர். உலகில் உள்ள மதங்களுள் தொன்மை வாய்ந்தது இந்து மதமாகும். இந்து மததிலில்லாத தத்துவமோ சமய நெறிகளோ கலை கலாச்சாரச் செழுமையோ வேறு எந்த மதத்திலுமில்லை. ஆனாலும் இன்று இந்து மதம் மிகத் தளர்ச்சி அடைந்துள்ளது. மதங்களின் ஆட்சி அதிகாரமோ ஆட்சியினரின் ஆதரவோ அற்ற தும் வறுமை மிகுந்ததும் இந்து மதமே. இவற்றால் செல்வமும் அதிகாரமுமுடைய ஏனைய மதத்தினர் இந்துக்களை எளிதாக மதமாற்றம் செய்கின்றனர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பழமையுடைய இந்துக்களின் தொகையும் 400 ஆண்டுப் பழமையுடைய இஸ்லாமியரின் தொகையும் ஏறக்குறையச் சமமானவையே.

ஐ.நா சபையில் இஸ்லாத்தின் சார்பில் 27 நாற்காலிகள் இருக் கின்றன. அதெப்படி உலகில் தன்னாதிக்கம் உள்ள 27 இஸ்லாமிய நாடுகள் இருக்கின்றன. இந்துக்களின் சார்பில் ஒரே ஒரு நாற்காலி நேபாள நாற்காலி அதுவும் ஆடிக்கொண்டி ருக்கின்றது. முஸ்லீம்களுக்காக 27 பிரதி நிதிகள் ஐ நா சபையில் குரல்கொடுக்க இருக்கின்றார்கள். இந்துக்களின் நிலைமை என்ன?

இந்தப் பென்னம் பெரிய இந்து மதப்பழமை வாய்ந்த இந்தி யாவில் இந்துக்களின் சார்பில் ஒரு நாற்காலி கூட இல்லையே ஏன் இந்துக்களிடம் எல்லாம் இருந்ததும் இந்து சமூகம் சமூக உணர்வில்லாத ஒரு சமூகம். இந்தியா மதச் சார்பற்ற நாடு என்று பெரிதாக பீற்றிக் கொள்கின்றது. அதுவே இந்தி யாவின் பெலமும் பெலவீன முமாகும். இந்தியாவில் இஸ்லாமியரின் தொகை 11 வீதமாகும். இருந்தும் ஆட்சியையே அசைக்கும் சக்தி பெற்றவர்களாக அவர்கள் விளங்குகின்றார்கள். காரணம் என்ன? அடம்பன் கொடியும் திரண்டால மிடுக்கு. என்பது தான் . உள்ள 11 சத வீதமும் திரண்டு மிடுக்காக இருக் கின்றது. ஏறக்குறைய 88 வீதமான இந்துக்கள் இருந்தும் இவர் களுக்கு இல்லாத மிடுக்கு அவர்களுக்கு இருக்கின்றது. காரணம் அவர்கள் சமுதாயம் உணர்வற்ற ஒரு சமுதாயமாக இருப்பதுதான் .

மானாமதுரைக்குப் பக்கத்தே 7 மைல் தொலைவில் இளையான் குடி என்னும் மாபெரும் ஞானி அவதரிக்கத்தவம் செய்த சிற்றூர் அது. அங்கு ஒரு காலத்தில் எல்லோரும் இந்துக்களே. இன்று அங்கு ஒரு இந்துவும் இல்லை. ஏன்? என்னவாயிற்று எல்லோரும் இஸ்லாமியராயிற்றாங்க. மத்திய கிழக்கு பணம் வந்து தாராளமாக விளையாடுகின்றது. மாலைதீவு என்னும் பெயர் மாலை போல் பல தீவுக்கூட்டங்கள் அமைந்த தீவு என்ற காரணத்தால் அமைத்த தமிழ்ப் பெயராகும். அங்கு மொகஞ்சதாரோ கரப்பாகாரத்தைச் சேர்ந்த இந்து மதம் செழித்தி ருந்தது. இன்று அங்கு வாழ் வோரின் முன்னோர்கள் தமிழர் களே. இந்துக்களே, அங்குள்ள இந்து மதத்தின் பழமை நோர்வே ஆராய்ச்சியாளர்களால் நிறுவப் பட்டுவிட்டது. அதன் பின்னர் பௌத்தம் பரவியது. அராபிய வர்த்தகர்களின் வருகையால் எல்லோரும் இஸ்லாம் ஆக்கப் பட்டு விட்டடார்கள்.

இலங்கைக்குப் பௌத்தம் வருவதற்கு முன் இங்கு வாழ்ந்த மக்கள் யாவர்? அவர்களின் மதம் யாது? இன்று இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர் களினதும் சிங்களவர்களினதும் காடுகளில் ஒதுங்கி வாழும் வேட இனத்தவர்களினதும் முன் னோரே இங்கு வாழ்ந்த மக்களாவர். இவர்கள் எல்லோரும் ஓரினத்த வராகவே வாழ்ந்து வந்தனர்.

இன்று இந்து மதம் என அழைக்கப்படும் சைவமதத்தின் தொன்மை மதமே அவர்களின் மதமாகும்.

நமது முன்னோரின் குறைகளைப் பயன்படுத்திப் பௌத்தம் புகுந்து விட்டது. சிங்களவர் தமிழர் வேடர் என முன்னோர்கள் பிளவு பட்ட பின்பு இஸ்லாமும் கிறிஸ்தவமும் புகுந்து மேலும் பிளவுபடுத்தி விட்டன.

இலங்கை முழுவதும் இந்து மதம் பரவியிருந்ததற்கான சான் றுகள் பலவுண்டு. இலங்கையில் நாலாபக்கங்களிலுமுள்ள பழமை வாய்ந்த திருக்கோயில்களே சான்று. தெகிவளையில் இன்று புகழோடு விளங்கும் விஸ்ணு கோவில் அமைந்துள்ள ஊரின் பெயர் நெடுமாலுய என்பதாகும். நெடுமால் என்பது விஸ்ணுவைக் குறிக்கும்

தூயதமிழ்ப் பெயராகும். சிங்களம் தென்னிலங்கை முழுவதும் தமிழின் மூலக் கூறுகளையும் இந்து சமயத்தின் தடங்களையும் நாம் காணலாம்.

இலங்கையில் யார் ஆட்சியில் அமர்ந்தபோதும் அவர்களின் ஆதரவு பௌத்தத்துக்கு உண்டு. ஏனெனில் பௌத்தத்தின் ஆதர வில்லாமல் இலங்கையில் யாரும் ஆட்சியை அமைக்க முடியாது.

இஸ்லாத்துக்கு உலகிலுள்ள இஸ்லாமிய நாடுகளின் தாரீமீக பொருளாதார உதவிகள் நிறைய வுண்டு. கிறிஸ்துவத்துக்கும் பலம் வாய்ந்த வத்திக்கான் அரசு மாத் திரமின்றி ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும் உண்டு.

பாவம் இந்து மதம் இதற்கு யார் உதவப் போகின்றார்கள். இத்தகைய பரிதாபகரமான நிலையில் வெளி நாடுகளில் மாத்திரமல்ல. இலங் கையிலே இந்துக்கள் அகதி களாக்கப்பட்டுவிட்டனர்.வெளிநாடுக ளிலுள்ள இந்துக்கள் பொரு ளாதார நிறைவு பெற்றுள்ள போதிலும் அந்த அந்த நாடுகளில் வதியும் உரிமை முதலியன பெறுவதற்காக மதம் மாறி வருகின்றார்கள். அது போலவே இலங்கையிலும் நான் மதம் மாறி விட்டேன். என்று தினசரிகளில் விளம்பரங்கள் வந்து கொண் டிருந்தன. வெளி வராத மதமாற்ற ங்கள் மிகப்பல.

இலங்கையில் பௌத்தன் மதம் மாறுவதில்லை.

இஸ்லாமியனோ கிறிஸ்துவனோ மதம் மாறுவதில்லை. இந்து மதத்தவன் மாறுகின்றான். மாற் றப்படுகின்றான். இந்த நிலை நீடித்துக்கொண்டே போனால் இலங்கையில் இந்துக்களில் நிலை என்ன இவற்றைத் தடுத்து நிறுத்த இந்து மத குருமார் இந்து பரிபாலன சங்கங்கள் இந்து சமயப் பேராசிரியர்கள் இந்து சமயப் பெரியோர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் யாவை என்று நாம் சிந்தித்து உடனே செயற்பட வேண்டாமா?

கொழும்பு மாநகரத்தில் மாத்திரம் ஏறக்குறைய 30 இந்து சமய நிறுவனங்கள் உள்ளன. பல்லா ண்டு காலமாகப் பல நல்ல ஆக்கப் பணிகளைச் செய்து வருகின்றன. தெய்வ நம்பிக்கை உடைய பொது மக்களும் தாழ் விலாச் செல்வர்களும் தாராளமாகப் பொருள் வழங்கி வருகின்றனர் நிர்வாகத்தில் தலையிடாத இந்த மேன்மக்கள் வழங்கிவரும் உதவிகள் இருந்தும் நமது கோவில்களும் சங் கங் களும் சிறப்பாக நடைபெறாமைக்குக் காரணம் என்ன?

இவற்றின் நிர்வாகிகள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண் டும். மதமாற்றத்தின் மூலம் இந்து மக்கள் அற்றபின் நமது நிலை என்ன?

இந்து சமயத்தின் அறங்காவ லர்களாகவும் நீதி நிர்வா கிகளாகவும் உடையோர் பொதுப் பணியை இறை பணியாகச் செய் தற்குரியோர். தமக்குள் பிளவுற்று நீதி மன்றேறித் தம்மைவிடத் தகுதி குறைந்தோரிடம் நீதிக்குப் பொதுப் பணத்தை கொட்டிப் போராடும் நிலை வருந்தத் தக்கதல்லவா?

தெய்வபக்தியோடு தம்மை ஒறுத்து ஏழைகள் தெய்வப் பணிக்கு வழங்கிய பொருளைப் போலிக் கௌரவத்திற்காக வழக்காடிச் செலவழிக்கலாமா? பொறுத்திருந்து நீதி வழங்கும் தெய்வத் தண்டனையிலிருந்து இவர்கள் தப்ப முடியுமா? சிவச் சொத்தைத் தீண்டியவருக்கு எத்தகைய நரக வேதனை கிடைக்குமெனச் சாத்திரங்கள் விதிக்கின்றன என்பதைக் கோயிற் குருமார் இவர்களுக்கு விளக்கமாகக் கூறவேண்டும்.


இந்து சமய மக்கள் மதம் மாறி இந்து சமயம் பெலவீனப்பட்டு இறுதியில் இலங்கையில் இந்து சமயமே அழிந்த பின் இந்து சங்கங்கள் இருக்க முடியுமா? பழம் பெருமை வாய்ந்த திருக்கோயில்களின் கதி யென்ன? சக்தி வாய்ந்த அம்மன் கோவில் அல்லவா? மடுமா தாவாக மாற்றப்பட்டுள்ளது. இலங்கையில் இந்துசமயத்தை அழித்தவர்கள் என்று வருங்காலம் கூறும் பழிச் சொல்லை நாம் ஏற்றுக்கொள்ளப் போகிறோமா?

இந்நிலையில் பெரியோர்களே!

அரசிடம் ஆலோசனை கேட்ப தையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். திருக்கோயில் நிர்வாகத்திற்கு இந்து சமய மன்றங்களின் நிர்வாகத்திற்கும் ஆலோசனை வழங்கத் தக்க நடுநிலையுடைய தக்கார் சபை ஒன்றிளை அமைத்துக் கொள் ளுங்கள். அவர்கள் மூலம் பிரச்சனைகளைச் சமூகமாகத் தீர்த்து இலங்கையில் இந்து சமயத்தை மறுமலர்ச்சியடையச் செய்யுங்கள்.

இந்துக்கள் தெய்வம் மறவார் செய்வினை பிழையார் ஏதுதாம் செயினும் ஏதுதான் வருந்தினும் இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவர்.

–பாரதி–



# ஆன்மீகக் கவிஞர் பாரதியின் கொள்ளுப்பேரன் ராஜ்குமார் பாரதியுடன் ஒரு செவ்வி

## கண்டுகேட்டவர்: சாலினி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**சாலினி:** புதுமைப் பெண் வாயிலாக பாரதி நிமிர்ந்த நன்நடை என்று ஒழுக்கத்தையா குறிப்பிடு கின்றார்?

**ராஜ்குமார்பாரதி:**–ஆமா அப்படியும் வச்சுக்கலாம். நான் ரொம்ப ரசித்த வார்த்தை அது. பெண்மைக்கு என்று சில அழகு உண்டு. நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி களும். இதில் நேர்கொண்ட பார்வை எப்போ நிமிர்ந்த நன்னடை இருந்தால் தான் நேராகப் பார்க்க முடியும் குனிந்த தலையுடன் வரும் பெண்ணின் பார்வை எப்படி நேராக இருக்க முடியும் நீ நிமிர்ந்து நிற்பதால் யாருக்கம் நீ அஞ்சவேண்டாம் ஏனென்றால் உன் பார்வை நேரானது நேர்மையானது என்றும் வைத் துக்கொள்ளலாம்.

**சாலினி:** அக்கினிக்குஞ்சு என்ற பாடலை பாரதி எதற்காகப் பாடினார் என்று கூறமுடியுமா?

**ராஜ்குமார் பாரதி:–** என்னைப் பொறுத்தவரை அது ஒரு வேதாந்தக் கருத்துள்ள பாடல்
அக்கினிக் குஞ்சு அது ஒரு ஞானப்பொறி காடு என்பது மனவிகாரங்கள். இந்த ஞானத் தீயை மனத்தின் உள்ளே வைத்ததும் மனவிகாரங்களான காம குரோத கொதிப்புக்கள் நிறைந்த காடு வெந்து தணிந்தது. ஞானப்பொறி பெரிதாக இருந் தாலும் சரி சிறிதாக இருந்தாலும் சரி அது மனவிகாரங்களை அழித்துவிடும். அக்கினிக் குஞ்சான ஞானப்பொறியால் தன் மனவிகாரங்கள் அழிந்த சந்தோசத்தில்,

**அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை**
**அங்கொரு காட்டின் பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு– தழல்**
**வீரத்தில் குஞ்சொன்றும் மூப் பென்றும் உண்டோ**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.**

என்று பாடி ஆனந்தக் கூத்தாடி இருக்கின்றார்.

**சாலினி:–** பாரதிபாடிய தேசபக்திப் பாடல்கள் நிலைத்து நிற்காது என்றும் தெய்வப்பக்திப் பாடல்களே நிலைத்து நிற்கும் என்றும் கூறுவோருக்கு தாங்கள் கூறுவது என்ன ?

**ராஜ்குமார்பாரதி:–** பாரதி தேசத்தை நேசித்தமாதிரி வேறு யாரும் நேசித்திருப்பார்களோ என்பது ஐயப்பாடு. பாரதிக்கு தேசத்தின் மீது உண்மையான நிலைத்த பக்தி இருந்தது. அது அழியவே அழியாது. பாரதிபாடல்கள் அழிய வாய்ப்பே இல்லை.

**சாலினி:–** சிங்களத்தீவி னுக்கோர் பாலம் அமைப்போம். என்றும் சிங்களம் புட்பகம் சாவகமாகிய தீவு பலவினுஞ் சென்றேறி என்று இலங் கையை ஒரு சிங்களநாடாக பாரதி கூ றியுள்ளாரே.

**ராஜ்குமார்பாரதி:–** அவர் சிங்களநாடாகக் கருதிப் பாடவில்லை. பாரதம்–இந்தியா என்று சொன்னால் தமிழ் நாடும் அதற்குற்பட்டது தான் அப்படித்தான் இதுவும் அண்டை நாட் டுக்கு ஒரு பாலம் போடுவோம் என்பது உலக சமரசத்தை அவர் விரும்பியதால் தான்.

**சாலினி:–** மெல்லத்தமிழ் இனிச்சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என்று பாரதியார்

சொன்னதாக எழுதியும் மேடைகளில் பேசியும் வருகிறார்களே இதற்கு நீங்கள் மறுப்புக் கூறமுடியுமா?

**ராஜ்குமார் பாரதி:–** அவரே சொல்லிய மறுப்புத்தானே(சற்று மனத்தாங்கலுடன் )மெல்லத்தமிழ் இனிச்சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும் என்று ஒருத்தன்( டீ வி நீலகண்டசாஸ்திரி) சொன்னதை கேட்டு கொதித்தெழுந்து ஆத்திரத்துடன்

**இன்றொரு சொல்லினைக் கேட்டேன் இனி**
**ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்!**
**கொன்றிடல் போலொரு வார்த்தை – இங்கு**
**கூறத்தாகாதவன் கூறினன் கண்டீர்!**

என விழித்து

"புத்தம் புதிய கலைகள்..............
மெல்லத் தமிழ் இனிச்சாகும்–அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"

**என்றந்தப் பேதை உரைத்தான் –ஆ**
**இந்தவசை எனக் கெய்திடலாமோ**
**சென்றிடுவீர் எட்டுத் திக்கும்–கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.**

**தந்தை அருள்வலியாலும்– இன்று**
**சார்ந்த புலவர் தவவலியாலும்**
**இந்தப் பெரும்பழி தீரும் – புகழ்**
**ஏறிப்புவிமிசை என்றுமிருப்பேன்**

எனப் பாடியிருக்கின்றார். அப்படிச் சொன்னவனை கூறத்தகாதவன் கூறினன் என்றும் சாடி இருக்கின்றார். அவன் எவ்வளவு படித்திருந்தாலும் **பேதை** என்று என்று ஒரு போடு போட்டிருக்கின்றார். அவனை ஏசினதோடும் நிற்காமல் தமிழ் மக்களைப் பார்த்து எல்லாத் திசைகளிலும் போய் உள்ள கலைச் செல்வங்களை தமிழில் கொண்டுவந்து சேருங்க என்றார். அப்பவும் அவர் மனம் ஆறாது **இந்தப் பெரும்பழி தீரும் புகழ் ஏறிப்புவிமிசை என்றும் இருப்பேன்** எனத் தமிழில் பாடி தன் மனதை ஆற்றியிருக்கின்றார். பாடல்களை படிக்கும்போது முழுவதும் என்ன சொல்லி இருக்க என்று பார்க்க வேண்டும். இரண்டு வரியை மட்டும் எடுத்துண்டு பாரதி சொன்னார் என்று சொல்வது ரொம்ப ரொம்பத் தவறு ஆணித்தரமாக மறுக்கப்படவேண்டிய தவறு இது.

(இன்னும் வரும்.........)

# கிடைக்கப் பெற்றோம்

முத்தமிழ்ப் பாவலர் கவிஞர் ஞானமணியம் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட **மரபுநாதம், பதிக்கொருபாடல்** ஆகிய இரு புத்தகங்களும் கிடைக்கப்பெற்றோம். மரபு நாதம் தனிப்பாடல்களைக் கொண்டதாகவும் பதிக்கொரு பாடல் தெய்வங்களையும் திருத்தலங்களையும் பற்றிய பாடல் நூலாகவும் அமைத்துள்ளார். அழகான அமைப்பு. இலகுவான பாடல்கள் . இசையோடும் பாடக் கூடிய வண்ணம் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருத்தாழம் மிக்கவையாகவும் இங்கிருந்து எமது நாட்டை இங்கு கொண்டுவந்து பார்க்கக் கூடியளவுக்கு பாடல்களில் சொற்பிரயோகங்கள் அமைந்துள்ளன. அவருடைய என்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*.........என்றாலும் சந்தனச் சோலையிலே நின்று வளரும் வேம்பு மரத்திலும் சந்தம் கமழும் என்பார்கள். கவிதையின் நாட்டம் மிளிரும் என் சிந்தையிலே பிறக்கின்ற பாவினங்களிலும் கவியினிமை ஓரளவாயினும் தோன்றுமல்லவா? இந்த நன்னம்பிக்கை யிலேயே என் கனவுகள் நெடுநாட்களாகவே தொடர்ந்தன. நீண்டநாட் கனவுகள் பலிதமாகின............*

எழுத்தாளனது உண்மையான மன நிலை இங்கு படம் பிடிக்கப்பட்டுள்ளது. புத்தகம் விடுவதென்பது இலகுவான காரியமல்ல. பல துன்பங்களுக்கு மத்தியில்தான் ஒரு புத்தகம் வெளி வரமுடியும். கவிஞரின் முயற்சிகள் மேலும் மேலும் சிறப்புற்று தமிழ்பேசும் நல்லுலகம் பயனடைய வேண்டும் என்று கலசம் இறைவனை வேண்டிக் கொள்கின்றது.

–ஆசிரியர்–

# வெகுதானிய வருடப் பலன்கள்

## சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

### மேஷம்

எந்தக் காரியத்திலும் முன்னிற்க விருப்பமுள்ள மேஷ ராசிக்காரர்கள் பிறந்துள்ள வெகுதானிய வருடத்தில் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பணவசதி தாராளமாக இருந்தாலும் பிரச்சனைகளும் தொடர்ந்து வரும். வீடு , கடை, வாங்கும் விஷயங்களில் கவனம் தேவை. படிப்பு, உத்தியோக வாகன சமாச்சாரங்களில் குழப்பமும் தடையும் ஏற்படும். கல்யாணம் மற்றம் சுபநிகழ்ச்சிகள் எளிதில் நிறைவேறும் . சிலருக்கு திடீர் அதிஷ்டமும் பதவி, கௌரவம் ஏற்படும். ஆண்டுக் கடைசியில் குடும்பத்தில் கலகம் பிரிவு ஏற்பட வாய்ப்புண்டு. கவனம் தேவை

### ரிஷபம்

எடுத்த காரியத்தை சிறப்பாக நிறைவேற்ற எதற்கும் தயங்காத ரிஷபராசிக்காரர்கள் இந்த ஆண்டில் பெரும் செலவுகளை சமாளித்தாக வேண்டும். பொருள் நஷ்டமும் வீண்பழியும் கூடவரும் உத்தியோகத்தில் தலைகுனிவு ஏற்படும். பிறர் விவகாரங்களில் தலையிட்டு மரியாதைக் குறைவும் பிரயாணங்களில் சுகபோகமும் சந்தோஷமும் ஏற்படும். ஆண்டின் பிற்பகுதியில் பணவசதி தாராளமாக ஏற்பட்டு தொழில் உத்தியோக மேன்மையும் கிடைக்கும். தடைப்பட்ட திருமணங்கள் நிறைவேறி குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். நட்பு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

### மிதுனம்

எடுத்த காரியத்தில் இரட்டை லாபம் தேடுகின்ற மிதுனராசிக்காரர்களே வெகுநாட்கள் கழித்து உங்கள் பக்கம் வசந்தம் வீசுகின்றது. பிரிந்த உறவுகள் நெருங்கி வரும் ஆவலுடன் எதிர்பார்த்த விடயங்கள் விரைவாக நிறைவேறும். வழக்கு விவகாரங்களில் சுமூகமாக தீர்வு வரும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சியாக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் தொழிலில் பிரச்சனை இருந்தாலும் ஓரிரு மாதங்களில் மாறிவிடும். பழைய உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்து மகிழ்வீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி கிட்டும். பொருள் வரவு சரளமாக இருந்தாலும் சிலவு கைமாறிப்போகும். ஆண்டின் பிற்பகுதியில் உத்தியோக மாற்றம் இருக்கும். ஆன்மீக யாத்திரை செல்ல வாய்ப்பு உண்டு. நெருக்கமானவர்களின் நட்பில் கவனம் தேவை.

### கடகம்

சொல்வீச்சில் வல்லவரான தங்களுக்கு இந்த ஆண்டு கொஞ்சம் பிரச்சனையான ஆண்டு தான். 8 இல் குருவும் 10 சனியும் நீசமாகவும் இருந்து அமைதியைக் கெடுப்பார்கள். பல விஷயங்களில் நீங்களாக மாட்டிக்கொண்டு விழிப்பீர்கள். மத்தளத்திற்கு இரண்டு பக்க இடிபோல வீட்டிலும் வெளியிலும் வாங்கிக் கட்டிக்கொள்வீர்கள். ஆனால் பொருளாதாரம் மேன்மை பெறும். உறவினர்களால் பலவகை நன்மை ஏற்படும். பிரயாணங்களால் அலைச்சலும் பொருட்செலவும் ஏற்பட்டாலும் காரிய வெற்றி உண்டு. தொழிலில் மந்த நிலையும் உத்தியோகத்தில் பிரச்சனையும் ஏற்படும். மனதில் நிம்மதி இராது ஆண்டுக் கடைசியில் சுப நிகழ்ச்சிகளால் மனம் சந்தோஷப்படும். அதிஷ்டக்காற்றும் வீசும். நல்லோர் உறவு ஏற்படும். தெய்வ அருள் கிட்டும்.

### சிம்மம்

எப்போதும் முன் வைத்த காலை பின்வைக்காத சிம்மராசிக்காரர்களே! கடந்த ஆண்டு வாடிவதங்கி இளைத்திருந்தீர்கள். அஷ்டமத்துச் சனியும் 6 இல் குருவும் நீசமாகவும் இருந்து ஆட்டிப் படைத்தார்கள். இப்போது புத்தாண்டோடு நல்ல காலமும் பிறந்திருக்கின்றது. தடைப்பட்ட காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும். கல்யாண விஷயங்கள் மளமளவென்று நடக்கும். வீடு வாகன வசதிகளோடு சிலருக்கு புத்ர பாக்கியமும் உண்டாகும். ஆயினும் குருமாற்றத்திற்கு தக்கவாறு ஆண்டின் பிற்பகுதியில் திடீர் தடுமாற்றமும் பொருளாதார நெருக்கடியும் உண்டாகும். கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு பின்பு சரியாகும். வயதான தாய்தந்தையர்களை கவனமாக கவனிப்பது நல்லது. பிரயாணங்களில் சுகவீனமும் பொருட்செலவும் ஏற்படும். மிகுந்த பிரயாசையால் உத்தியோக உயர்வு உண்டு.

### கன்னி

எதையும் சிரித்து மழுப்பி காரியமாற்றும் தங்களுக்கு சோதனை தொடங்கும். சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட்டு சூடு போட்டுக் கொள்வீர்கள். படிப்பில் மிக மந்த தன்மை தலைகாட்டும். காதல் விவகாரங்களில் அடிதடியில் முடியலாம் யாரையும் நம்ப வேண்டாம். பிறருக்காக பரிந்து எதையும் செய்யாதீர்கள். பகை வரும். பிரயாணங்கள் சுகமாக அமையும். தெய்வதரிசனங்களும் பெரியோர்கள் சந்திப்பும் கிட்டும். அருளாசி பெறுவீர்கள். ஆண்டின் பிற்பகுதியில் சிலர் புகழ் பெறுவீர்கள்.

பட்டம் பெறுவீர்கள் . தொழில்துறை மேன்மை அடையும். வியாபாரம் பெருகும். கண்நோயினால் அவதிப்பட வாய்ப்புண்டு உறவினர்களால் லாபம் ஏற்படும். குழந்தைகளால் வீட்டில் அடிக்கடி தகராறு வரும் பொறுமை தேவை.

## துலாம்

வித்தியாசம் பார்க்காத குணமுடைய உங்களுக்கு புத்தாண்டில் நல்ல தெளிவு கிடைக்கும். சென்ற ஆண்டில் கஷ்டப்படுத்திய வழக்கு விவகாரங்கள் சுமூகமாக தீர்வு பெறும். நண்பர்கள் ரூபத்தில் எதிரிகள் நெருங்குவார்கள் மிக கவனம் தேவை. சொந்த வீடு இல்லாதவர்கள் வீடு வாங்க வாய்ப்பு வரும். சிலருக்கு புத்ரபாக்யம் உண்டாகும். தூரதேச பயணத்தில் கஷ்டங்கள் வரும். உடல்நலக் குறைவும் ஏற்படும். அனாவசிய குறுக்கீடுகளால் நீதிமன்றம் செல்லும்படி வரும் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளவும். குழந்தைகளால் பெருமையும் மனதிற்கு சந்தோஷமும் ஏற்படும். வீட்டிற்கு அடிக்கடி விருந்தினர்கள் வருவார்கள். தொல்லையும் கூடவரும். சிலருக்கு இதயத்தில் வருத்தங்கள் வரலாம். கணவன் மனைவி உறவில் விட்டுக்கொடுப்பது நல்லது. பொறுமை தேவை.

## விருச்சிகம்

எந்த கஷ்டத்திலும் சோர்ந்து போகாத தாங்கள் சென்ற ஆண்டு தளர்ந்து காணப்பட்டீர்கள். சகோதரர்களாலும் நண்பர்களாலும் கஷ்டப்பட்ட நீங்கள் இந்த ஆண்டு நிமிர்ந்து நிற்க வாய்ப்புண்டு. கவலைப்படச்செய்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெறும். எதிரிகள் அடங்குவார்கள். உடல்நல பாதிப்பு ஏற்படும். மருத்துவமனை வாசமும் உண்டு. காதலில் ஏமாற்றம் அடைவீர்கள். சிலருக்கு திருமண யோகமும் உண்டு. பிரயாணங்கள் மகிழ்ச்சி அளிக்கும். வீடு மனை வாங்குவதில் பிரச்சனை தலைதூக்கும். பிள்ளைகளால் கௌரவ பாதிப்பு உண்டு. பொதுவிஷயங்களில் தலையிட வேண்டாம். வீண்பழி வந்துசேரும். வியாபாரத்துறை மந்தமாக இருக்கும். கடன் தொல்லை உண்டு. துக்க சமயத்தில் மனைவி வழி கை கொடுக்கும். நிதானம் தேவை.

## தனுசு

பொதுவாழ்வில் ஈடுபாடு கொண்ட தங்களுக்கு புத்தாண்டு சுமாரான பலன்களையே கொடுக்கும். பிள்ளைகள் எதிரிகளாக மாறுவார்கள். குடும்பத்தில் கலகம் ஏற்படும். துக்க சமயத்தில் நண்பர்கள் உதவுவார்கள். காலில் காயம்பட வாய்ப்பு உண்டு. கவனம் தேவை. பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. பொருள் இழப்பும் ஏற்படலாம். கல்வித்துறை மேன்மை பெறும். பட்டம் பதவி கிடைக்கும். தொழில்துறையிலும் லாபம் ஏற்படும். குழந்தைகளிடம் மனக்கசப்பும் விரக்தியும் உண்டாகும். வேலையில் மேல்அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். ஏதிரிகளை அடக்குவீர்கள். ஆண்டின் பிற்பகுதியில் சிலருக்கு காதல்துவக்கமும் ஏற்படலாம். சிந்தித்து செயற்பட வெற்றி நிச்சயம்.

## மகரம்

எதையும் பலதடவை யோசித்து செயலாற்றும் தாங்கள் சென்ற ஆண்டில் இடிந்து போய்விட்டீர்கள். எதிலும் சோதனை ஏகப்பட்ட தடங்கல்கள் ஆயினும் பொறுமை யோடு சமாளித்தீர்கள். தற்போது குடும்பத்தில் சரியான ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரம் சீராக இருந்துவரும். தொழில்துறையில் பிரச்சனைகள் இருந்தாலும் சமாளிக்கலாம் . பேச்சைக் குறைத்து செயலில் ஈடுபடுவது நல்லது. உறவினர்களால் தொல்லை உண்டு. பிரயாணத்தால் சந்தோஷமும் இருந்தாலும் கூடவே பிரச்சனைகளும் உண்டு. ஆண்டின் பிற்பகுதியில் உடல்நலம் பாதிக்கும். பணவரவு சரளமாக இருந்தாலும் மனதில் மகிழ்ச்சி நிலைக்காது. நண்பர்களால் ஏமாற்றம் அடைவீர்கள்.

## கும்பம்

மனதில் இருப்பதை எப்போதும் வெளிக்காட்டிக்கொள்ளாத தாங்கள் புத்தாண்டில் நிம்மதி அடைவீர்கள். வேலைப்பளு குறையும். வீட்டில் மங்கள காரியங்கள் நடைபெறும். குடும்பம் கலகலப்பாக இருக்கும். உடல்நலம் பாதிக்கப்பட்டாலும் விரைவில் குணமடைவீர்கள். வெகுநாளைய ஆசை பூர்த்தியாகும். கல்வித்துறை மந்தமடையும். வயிற்றில் வலி ஏற்பட்டு அவதிப்படுவீர்கள். சிலருக்கு காலில் ரணம் ஏற்படும். பிரயாணங்களால் உற்சாகம் ஏற்படும். பொதுவாழ்வில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு அதிக வேலைப்பளு உண்டு. நண்பர்களுக்குள் பகை உண்டாகும். வீண்பழி சுமக்க நேரிடும். வீடுவாங்க நல்ல நேரம் கலைஞர்களுக்கு பெருமையும் புகழும் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் வசந்தம் வீசும் . அடக்கமாக இருந்து ஆனந்தம் அடைவீர்கள்.

## மீனம்

பேச்சைக் குறைத்து காரியத்தில் கெட்டியான நீங்கள் புத்தாண்டில் சுறுசுறுப்பாக காரியமாற்றுவீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் இருந்தாலும் முடிவாக சுபமாக அமையும். பிரயாணங்களால் தொல்லை ஏற்படும். உறவினர்கள் சமயம் பார்த்து தொந்தரவு தருவார்கள். கல்வித்துறையில் மேன்மை உண்டு. எதிர்பார்த்தபடி சித்திபெறுவீர்கள். திருமண விஷயங்கள் நல்லவிதமாக முடியும். முதுகில் வலி ஏற்பட்டு கஷ்டப்படுவீர்கள். திடீர் அதிஷ்டத்தில் பொருள் வரவு உண்டு. வாகனத்தால் கஷ்டம் ஏற்படும். ஆண்டின் பிற்பகுதியில் உத்தியோக உயர்வு கிடைக்கும். தொழிற்துறை மந்தமாக இருக்கம். வியாபார விஷயங்களும் இறுக்கமாக இருந்து வரும. நஷ்டப்பட வாய்புண்டு. கவனம் தேவை.

# ஓதுவார்கள் திருமுறை ஓதுதலே நன்மை பயக்கும்

***தூய்மையையம் நெறியையும் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெரியோர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளை முடிந்த அளவு பாதுகாத்து வரவேண்டும் என்பதே என்னைப் போன்றவர்களின் எண்ணமாகும்.**

***தேவார திருவாசக திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் இவற்றை இந்த வரிசையில் தான் பாடவேண்டும். ஏன் இவற்றை மாற்றிப் பாடினால் என்ன? ஏன்று கேட்பது நமது அறியாமையையும் அகம்பாவத்தையும் வெளிப்படுத்தும்.**

**–சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்–**

இவ்வுலகை படைத்து இயக்கி நம்மையெல்லாம் வழி நடத்துகின்ற இறைவனுக்கு நாம் செய்கின்ற வழிபாடானது ஆத்மார்த்தம் பரார்த்தம் என இருவகைப்படும் அதாவது தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் செய்வது ஆத்மார்த்தம் என்றும் எல்லோ ருக்கும் பொதுவாக உலக நன்மைக் காகவும் செய்வது பரார்த்தம் என்றும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. இரண்டு வழிபாட்டிற்கும் விதி முறைகள் வகுக்கப்பட்டிருந்தாலும் ஆத்மார்த்த பூஜையால் நமது வசதிப்படி வழிபாடுகளைச் செய்வது சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப பிரார்த்தனைகளைச் செய்யலாம். ஆனால் பொதுவாக ஆலயங்களில் செய்யப்படுகின்ற பரார்த்தப் பூஜையில் ஆகமங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி வழிபாடு செய்வதே சாலச் சிறந்தது.

ஆகம வழி பூஜையில் பஞ்சபூத சேர்க்கை மிக மிக இன்றிய மையாதது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளின் சம்பந்தமாக விக்கிரஹ அபிஷேகம், தீபம், உபசாரம், மந்திரம் இவற் றினால் இறைவனுக்கு வழிபாடு செய்வதை நாம் வழக்கமாக கொண்டிருக்கின்றோம். ஆகாய சப்தவழியில் சம்பந்தப்பட்ட மந்திரம் ஓதுதல் அருளாளர்களின் அருட்பாக் களை படித்தல் இவற்றை முறையாக செய்யவேண்டியது அவசிய மான தாகும். தெய்வத்திருப்பாடல்களை தெய்வ சந்நிதானத்தில் முறையாக ஓதுவதற்கும் அனைவரும் சேர்ந்து பஜனை முறையில் பாடுவதற்கும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக பஞ்சபுராணம் என்றழைக்கப்படும் தேவார திருவாசக திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் இவற்றை இந்த வரிசையில் தான் பாடவேண்டும். ஏன் இவற்றை மாற்றிப் பாடினால் என்ன? ஏன்று கேட்பது நமது அறியாமையையும் அகம்பாவத்தையும் வெளிப்படுத்தும். இதுபோன்ற விஷயங்களை நேரடியான ஆதாரங்களை விட நமது முன்னோர்களின் வழிநடத்தலை பின்பற்றுவதே முறையாகும். அதுபோல இறைவனுக்கு உபசாரங்கள் நடைபெறும் போது முறையாக பண்ணிசை பயின்ற ஓதுவா மூர்த்திகளை கொண்டு திருமுறை ஓதுவதே நன்மை பயக்கும். தூர தேச நேர விஷயங்களை கருத்தில் கொண்டு சில மாற்றங்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் ஆண் பெண் வித்தியாச உணர்வை தூண்டி விடுவதாக பொருள் கொள்ளக் கூடாது. நமது வழிபாட்டு முறைகளில் இரு பாலாருக்குமே தனித்தன்மையான சேவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்ற தாழ்வே கிடையாது. **இறைவனே சரிபாதி அளித்த பிறகு நமக்கேது அதிகாரம். ஆனாலும் ஆகம விதிப்படியும் பெரியோர்களின் வழிபாட்டு முறையையும் அனுசரித்து செய்வதே சரியான தொன்றாகும்.** தூய்மையையம் நெறியையும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பெரியோர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளை முடிந்த அளவு பாதுகாத்து வரவேண்டும் என்பதே என்னைப் போன்றவர்களின் எண்ணமாகும். இதனால் தான் சில சமயங்களில் நாங்கள் சற்று இறுக்கமாக நடக்க வேண்டி உள்ளதே தவிர யாரையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமில்லை. இப்படி எல்லாவற்றையும் விட்டுக் கொண்டே போனால் தற்போது உலகம் உள்ள சூழ்நிலையில் முதலுக்கே மோசமாகிவிடுமோ என்ற பயத்தில் தான் முடிந்தவரை நமது பழைய நெறிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தவேண்டி உள்ளது. இது போன்ற விஷயங்களை ஆதாரபூர்வமாக எடுத்துச் சொல்வது மிக கடினம். இதற்கு மேலும் பக்தப்பெருமக்கள் நினைத்ததை எல்லாம் செயல்ப் படுத்தவேண்டுமென்றால் இறைவன் தான் துணை நிற்கவேண்டும்.

# இரக்கத்துக்குரிய இந்துமதம்

-சுந்தரன் -

இன்றைய உலகம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. மனிதனுடைய சிந்தனா சக்தியும் தன்னிச்சையாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. எங்கே போகிறோம்? என்று புரியாமலேயே போய்க் கொண்டிருகின்றான் மனிதன். மதங்கள் போட்டிபோட்டுக்கொண்டு மனிதனிடத்தில் தங்கள் செல்வாக்கை ஸ்திரப்படுத்துவதற்காக அவனைச் சுற்றி வலைகள் பின்னுவதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டி ருக்கின்றன. இது ஒருவகை வியாபாரமாக இன்று நடைபெற்று வருகின்றது. வியாபாரம் என்ற நிலைக்கு வந்தபின்பு பொய்யும் புரட்டும் தம்மிச்சையுடன் புகுந்துவிட்டன. உண்மைகள் திரிக்கப்படுவது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. மதங்களுக்கிடையிலான இப் போட்டித்தன்மை இறைவனை மறந்து சுற்றாடலை அசுத்தப்படுத்தும் தவிர்க்க முடியாத பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.



இந்தப்போட்டிக்குள் தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் அப்பாவித்தனமாக தானும் தன்பாடுமாக என்னை யாரும் அசைக்க முடியாது என்கின்ற ஆத்மார்த்த நம்பிக்கையுடன் அமர்ந்திருக்கிறது இந்துமதம்.

ஆயினும் இந்த இந்துமதத்தின் நம்பிக்கையாளர்கள் பலர் வெறுமனே பணத்துக்கும், வேறுபல தேவைகளுக்குமாக மாற்று மதங்களில் புகுந்து இந்து மதத்துக்குக் களங்கம் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

**சான்றோர் பலர் கூறியதுபோல் ஒரு இஸ்லாமியன் மதம் மாறுவதில்லை! ஒரு கிறிஸ்தவன் மதம் மாறுவதில்லை! ஆனால் இந்து மட்டும் ஏன் மாறுகின்றான்?**

நியாயமான இந்தக் கேள்விக்கு நாம் விடைகண்டாக வேண்டும். வெறுமனே பணத்துக்கும் பதவிக்கும் மாறுகின்றான் என்று மேலெழுந்த வாரியாகச் சொல்லித் தப்பிக்கொள்ள முடியாது.

பணத்துக்காக அவன் மாறிக்கொண்டாலும் அம்மதத்திற்குச் சென்றபின்பு இறைபக்தி கொண்டவனாகக் காணப்படுகின்றான். எனக்குத் தெரிந்த பலர் இந்துவாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறிக்கொண்ட பலர் பைபிளும் கையுமாக அலைவதைக் கண்டிருக்கின்றேன்.

அதே மனிதர் இந்துக்களாக இருக்கும்போது அப்படி ஏன் இருக்கவில்லை?

சமீபத்தில் எனது உறவினரின் மகன் தான் இப்போது இந்து இல்லையென்றும் கிறிஸ்தவன் என்றும் கூறியபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

பரம்பரை பரம்பரையாக இந்துக்களாக இருந்து திருநீற்றுப் பூச்சும் சந்தனமுமாக வாழ்ந்த குடும்பத்தின் வருங்காலத் தலைமுறை தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றது. ஏன்?

அதைவிட நான் கனவில் யேசுகிறிஸ்துவின் திவ்விய தோற்றத்தைக் கண்டு அனுபவித்ததாகவும் அந்த இளையவன் கூறியது இன்னும் எனக்கு ஆச்சரியத்தையே அளித் தது. இத்தகு சிறப்பு அனுபவத்தை அவன் ஏன் இந்துவாக இருக்கும் போது பெற்றுக் கொள்ளவில்லை?

மேலும் மேலும் அவன் கூறிய விடயங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுமில்லாமல் அவனை நினைத்துக் கவலைப்படவும் வைத்தது.

இந்துமதத் தத்துவங்களை அரைகுறையாக உள்வாங்கி வெளியிடும் ஒரு சிறுபிள்ளை முயற் சி நடைபெறுகின்றது.

தத்துவங்களை அரைகுறையாக உள்வாங்கும் மதப்பிரசாரகர்கள் அத்தத்துவங்களை வெளியிடும்போது அவைகளை பைபிளின் ஒரு பிரதியாக மதம்மாற இசையும் இந்துக்களுக்குக் காட்டுகின்றார்கள்.

இந்துக்களாக இருக்கும்போது இவற்றைப்புரிந்து கொள்ளாத இவர்கள், அவர்கள் கூறும்போது ***அப்படியா?*** என்று வியப்போடு ஏற்றுக் கொள்வதன் தாத்பரியம்தான் என்ன என்பது புரியவேயில்லை.

எங்கோ ஓரிடத்தில் அடிப்படைத்தவறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பூரணமாக ஏற்றுக்கொண்டு அடுத்தகட்டத்தை யதார்த்தபூர்வமாக மிகத் தெளிவாக அணுகவேண்டும் என்று நினைக்கின்றேன்.

எவ்வளவோ தத்துவங்களை தன்னுள் உள்ளடக்கி தோற்றம்

தெரியாத அளவுக்கு அநாதியான இந்துமதம் நிறுவப்பட்ட ஏனைய மதங்களால் அபகரிக்கப்படுவதை வேதனையோடு பார்த்ததினால்தான் **இரக்கத்துக்குரிய இந்துமதம்** என்ற தலைப்பிட்டு இந்த தொடரை ஆரம்பிக்கின்றேன். இதனை இருபது அங்கங்களாகக் கொண்ட தொடராக அமைத்துள்ளேன். இத்தொடர் காய்தல் உவத்தல் இன்றி இந்துமதத் தத்துவங்களையும் தவறுகளையும் தாங்கி வரும். அடுத்த கலசத்தில் அங்கம் ஒன்று ஆரம்பமாகும். நான் பல கேள்விகளை இம் முன்னுரையில் எழுப்பியுள்ளேன். இவைகட்கான பதில்கள் உங்கள் எண்ணங்களில் உதித்தால் அவற்றை கலசம் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள். இன்று இதன் தேவை மிகப் பெரிது என்பதை உணர்ந்து உணர்வு பூர்வமாக என்னோடு சேர்ந்து நீங்களும் செயற்படுங்கள். வாருங்கள் வாது புரிவோம்!

# தஞ்சையில் உலக சைவ மாநாடு

## S.K. கணபதி (மாநாட்டுப் பேராளன்)

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் , திருப்பனந்தாள் ஆதீனம்,போரூர் ஆதீனம், தஞ்சைப் பல்கலைக்கழகத்தினர், ஆகியோர் இணைந்து கடந்த 97 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19,20,21ந் திகதிகளில் தஞ்சைப் தமிழ்ப்பல் கலைக்கழகத்தில் வெகுசிறப்பாக ஆறாம் உலக சைவ மகாநாட்டை நடத்தினர். இம் மகாநாடு மிகவும் சிறப்பாக நடந்தது.

மங்கள வாத்தியமான நாதசுரம் இசைக்க நல்ல திருமுறைகள் ஒலிக்க மகாநாடு ஆரம்பமானது. ஆதீனத் தலைவர்கள் ஒருங்கிணைந்து மேடையில் அமர்ந்திருந்து சைவத்தைப் பற்றியும் திருமுறைகள் பற்றியும் கருத்துரைகள் வழங்கியது கேட்பதற்கு மகிழ்ச்சியாய் இருந்தது. பல பேராசிரியப் பெருமக்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டது குறிப்பிடத்தகதகது. சைவம் தழைக்க சைவசமயம் மேலோங்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஆழமான கருத்துக்களுடன் எடுத்துக் கூறியது கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாய் அமைந்திருந்தது. இம்மகாநாட்டில் உலகமெங்கிலுமிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக இலண்டன் > சிறிலங்கா சிங்கப்பூர், மலேசியா மோரீசியஸ் தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வந்திருந்தனர். தஞ்சைப் பல்கலைக்கழக கரிகாற் சோழன் கலை அரங்கில் நடைபெற்றது. அரங்கம் கொள்ளாமல் சைவப்பெருமக்கள் அமர்ந்திருந்தனர். மாலை நேரங்களில் சைவசமயத்தை பிரதிபலிக்க கூடிய நாடகங்கள் நடனங்கள் நடைபெற்று கூடடத்தினரைக் களிப்பில் ஆழ்த்தியது.

தொடக்கவுரை ஆற்றிய சமயப் பெரியார் பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் அவர்களின் சொற்பொழிவு சைவசமயத்தின் வரலாற்றை எடுத்துக் கூறுவதாக அமைந்திருந்தது. பல ஆய்வாளர்களின் கருத்துக்களை எல்லாம் தொகுத்து அவர்களது சொற் பொழிவுக்கு ஆக்கம் அளித்திருந்தார்கள். ஆய்வுக்கட்டுரைகள் 450க்குமேற்படடவைகள் சமர்ப்பிக்கப்பட்டு கருத்தரங்குகள் நடைபெற்றன. மூன்று நாட்களும் பிற்பகலில் பல்வேறு இடங்களில் பல தலைப்புக்களில் தகுதி வாய்ந்த சான்றோர்கள் தலைமை ஏற்க பேராளர்கள் பங்குபற்றி தங்களது ஆய்வுக் கட்டுரைகளை வாசித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதும் அதைப் பலர் அமர்ந்து செவி மடுத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் அதன் பணியாளர்கள் , மாணவர்கள் அனைவரும் பேராளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் முனைப்பாக இருந்தனர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். உணவு வழங்குவதில் சிறப்பு இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு சென்றதும் அமர்ந்து வேண்டியதைச் சாப்பிடக்கூடிய வகையில் பந்தல் அமைத்து பரிமாறியது சிறப்புக்குரியது. வெளியூர்களில் இருந்து சென்ற பேராளர்களுக்கு எல்லாம் தங்க வசதியும் போய் வருவதற்கு வாகன வசதியும் செய்து கொடுத்து அனைவரையும் மனம கவரச் செய்தது ஏற்பாட்டாளர்களின் சாதூரியம் என்று சொன்னால் மிகையாகாது. அவ்வளவு திறம்படச் செய்திருந்தனர். இந்த மகாநாட்டின் ஒரு சிறப்பு தமிழ் நாட்டிலுள்ள பதிப்பகங்கள் நூல் விற்பனையார்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து அரங்கத்தின் முன்பகுதியில் கடைவிரித்து நூற்களை பரப்பி வைத்து பார்ப்பவர்களை கவர்ந்திழுக்கும வண்ணம் செய்திருந்தார்கள். நமது சமயத்தைச் சார்ந்த நூற்கள் இவ்வளவா என்று ஆச்சரியப்படத்தக்கவாறு ஆங்கே பரப்பப்பட்டிருந்தது. அநேகர் பல நூற்களை வாங்கிச் சென்றனர். சிலசமயம் சில நூல்கள் தேடிச்சென்றாலும் வாங்கக் கிடைக்காது ஆனால் இங்கே ஒரே இடத்தில் தேடாமல் வாங்கக் கூடியதாக இருந்தது அந்த அரங்கம்.

இம்மகாநாடு மூன்றாம் நாள் நிறைவு பெறும் நாளில் தமிழக அறநிலைத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அறநிலைத்துறை ஆணையாளர் திரு மெய்கண்டதேவன் ஆகியோர்களின் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இந்தச் சொற்பொழிவுகள் பேராளர்களை பெரிதும் கவர்ந்ததாக அமைந்திருந்தது. இப்படி ஒரு மகாநாடு ஆண்டு தோறும் நடைபெறுவது சைவசமய வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விளங்குக சைவநீதி உலகமெலாம்.

# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

## GLEN CARRIERS LIMITED

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**
**Tel: 0181 740 8379/ 0181 749 0595**
**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**
**BONDED WAREHOUSE**
**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

# SATHY ESTATES LTD
# SATHY PROPERTY SERVICES

## Residential Lettings

LANDLORDS & TENANTS WELCOME

LANDLORDS

**YOUR RENT IS GUARANTEED * QUARTERLY RENT PAYABLE IN ADVANCE**

TENANTS

**ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORTS**

AREAS

**LONDON BOROUGHS OF BRENT * HARROW * EALING * BARNET**

SATHY PROPERTY SERVICES LTD
29 Wembley Hill Road, Wembley, HA9 8AS
**Tel: 0181 902 2221**
**Fax: 0181 903 8560**

SATHY ESTATES LTD
177 HIGH ROAD, WILLESDON NW10 2SD
**Tel: 0181 830 2585**
**Fax: 0181 830 3100**

## அகதிகளுக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் நிபுணத்துவ ஆலோசனை வழங்க புதியதோர் ஸ்தாபனம்

தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்வது முதல் குடும்பங்கள் இணைவது உள்ளிட்டு பிரித்தானியா பிரஜா உரிமை வழங்குவது வரையிலான உங்கள் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள முடியாத, இதுவரை தீர்க்க முடியாத அல்லது உங்கள் மனதை வாட்டும் குடிவரவு இருப்பிடம்–தொழில் வசதி–கல்வி–சுகாதாரம் போன்ற வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் தகுந்த நிபுணத்துவ ஆலோசனையைப் பெற

**INTERNATIONAL CONSULTANTS ON HUMAN RIGHTS AND RESOURCES**
**மனித உரிமைகளுக்கும் வளங்களுக்குமான சர்வதேச நிபுணர்கள்**

**FOR APPOINTMENTS**
**CALL ON**

# 0181 470 4575
# KN Enterprises

**First Floor, KN Enterprise House, 391 Barking Road London E6 2JT**

**தமிழர் புத்தாண்டில் புதியதோர் ஸ்தாபனத்தின் குதூகலமான திறப்புவிழா**

## KN Enterprises
# SUPER MARKET
## Groceries-News-Magazines-Food-&Drinks

## KN Enterprise House
## 391 Barking Road
## London E6 2JT

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Western Jewellers

230

0181-767 3445




அசல் 22 கரட்டிலான எல்லாவித நகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்.

1500 ஸ்ரேலிங் பவுண்களுக்கு ஒரே முறையில் நகைகள் வாங்குவோருக்கு 8 கிராம் தங்க நாணயம் இனாமாக வழங்கப்படும்

1000 ஸ்ரேலிங் பவுன்களுக்கு நகைகள் வாங்குவோருக்கு ஒரு சோடி தோடும் ஜிமிக்கியும் இனாம்

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

**230 Upper Tooting Road, Tooting, London SW17 7EW**

**Tel: 0181 767 3445 Fax: 0181 767 3753**

**Web:http://www.luxmi.com/western**

elc System

# EAST LONDON COMPUTERS (UK) LTD

* Sales * Repairs * Upgrades

* Service * Network



We specialise in Training, Networking and Total CAD Solution.

Guranteed to Match Any Price

527 Barking Road
East Ham
London E6 2LN
TeL: 0181 552 5222,
0181 552 3373
Fax: 0181 507 7525

http://www.ndirect.co.uk/~elc

Unit 12,
Trafalgar Business Centre,
77-87 River Road,
Barking,
Essex IG11 0JU
Tel: 0181 507 7575

Email : elc@ndirect.co.uk



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14. 04. 98 அன்று வெளியிடப்பட்டது.